முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 | 30–8–57 வெள்ளி | ஒலி 19

சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை!

சோவியத்திலே தமிழ் முழக்கம்! அழகேசரே; அறிந்து கொள்வீர்!

ஓரிரண்டு ஆண்டுகட்கு முன்னால் தென்னகத்து அறிவு விளக்கு சர் ஏ. இராமசுவாமி முதலியார் அவர்கள் அமெரிக்காவின் பல்கலைக் கழகம் ஒன்றில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்த சென்றிருந்தபோது, "திராவிடர்கள் என்று ஒரு இனம் தென்னிந்தியாவில் வாழ்ந்ததே, இப்பொழுது அவர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுடைய மொழி, கலாச்சாரம், அரசியல், பண்பாடு இவையெல்லாம் எந்நிலையிலிருக்கின்றன?" என்று அமெரிக்கர்கள் ஆசையோடு குசலம் விசாரித்த செய்தி நம்மை குதூகலத்தில் ஆழ்த்தியது.

"சென்னைக்கு அப்பால் இருப்போரும் தமிழ் படிக்க வேண்டும். அப்படியானால்தான் இந்தியா சிறப்படையும்." என்று உலக உத்தமர் காந்தியார் புகன்ற சொற்கள் நம்மைக் களிப்பில் ஆழ்த்தின.

இந்தியாவிற்கு வந்து சென்ற இரசியநாட்டுத் தலைவர்களான புல்கானினும்-குருச்சேவும் "இந்தியாவின் கலாசாரம் தென்னிந்தியாவில்தான் முழு உருப்பெற்று திகழ்கிறது." என்று புகழ்பாடிய மொழிகள் நம்மை பூரிப்படையச் செய்தன.

சீனாவிலிருந்து வந்து சூ என்லாய், "இந்தியாவிற்கும் சீனாவிற்கும் மிகப் பழங் காலத்திலிருந்தே நெருங்கிய தொடர்புண்டு. தென்னாடு பண்பாட்டின்—கலையின் உறைவிடமாக இருக்கிறது;" என்று சொன்ன சொற்கள் நம்மை சொக்க வைத்தன.

அண்மையில் சென்னைக்கு வருகை தந்த இந்திய உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த்அவர்கள் "திராவிடகலாச்சாரத்திற்குத் தலை வணங்குகிறேன்" என்று நகரப்பேரவை தந்த வரவேற்பிலே நவின்றதன் மூலம் காட்டிக்கொண்ட பணிவு நம்மைப் புளகாங்கிதமடையச் செய்தது.

இவைபோல நம் புகழ்பாடியோர் ஏராளம்! உலகப் பேரறிஞரான ஆல்பர்ட் சுவைட்சர் "திருக்குறள்போல் வேறு நீதி நூல் உலகத்தில் மிக அருமை" என்று 'இந்திய எண்ணமும் அதன் வளர்ச்சியும்' என்ற நூலிலே கூறியதன் மூலம் தமிழுக்கு புகழ் சேர்த்தார். நாம் மகிழ்ந்தோம். அண்டை நாட்டவரும் அடுத்த நாட்டவரும் பண்டை மொழியாம் நம் பைந்தமிழின் சீரையும் சிறப்பையும், எழிலையும் ஏற்றத்தையும், பொலிவையும் புகழையும் எடுத்து இயம்புவது நம் இதயத்திலே புதிய வலிவையும், நம் எண்ணத்திற்கு சிறந்த பொலிவையும் தருகிறது. அந்த இனிக்கும் செய்திகளோடு, அண்மையில் இன்னும் சில செய்திகள் நம்மை மகிழவைப்பனவாகவும் மாற்றாரை மருள வைப்பனவாகவும் இருக்கின்றன.

வேதாசலம் மறைமலையாகவும், சூரியநாராயண சாஸ்திரியார் பரிதிமாற் கலைஞராகவும், நாராயணசாமி நெடுஞ்செழியனாகவும், இராமையா அன்பழகனாகவும், தண்டபாணி இளம் வழுதியாகவும், கோதண்டராமன் வில்லாளனாகவும், சின்னசாமி செழியனாகவும், சோமசுந்தரம்மதியழகனாகவும் பெயர் மாற்றிக் கொண்டபோது "பெயர் மாற்றிக்கொள்கின்றார்களாம், பெயர்! சுத்த பைத்தியங்கள்!" என்று கேலி பேசியோர், கிண்டல் செய்தோர் ஏராளம்—ஏராளம்! "பெயர் மாற்றிக் கொண்டால் பஞ்சம் பட்டினி தொலைந்து விடுமா?"—'அவர்கள் எப்படி' என்ற ரசத்தைச் சார்ந்தவர்களின் இதயத்திலே எழுந்த ஐயவினா இப்படி! "பெயர்மாற்றிக் கொண்டால் திராவிட—நாடு கிடைத்து விடுமா?" நாம் சிரித்துப் புறக்கணிக்க வேண்டியவர்களின் சிந்தையிலே எழுந்த சந்தேகம் இது!

இவைபோலவே ஆள்வோரும், அமைச்சரேறுகளும் 'அங்கிங்கெனாதபடி எங்கும் எப்பொழுதும் கேட்டார்கள்! அதிலும் மத்திய அரசியல் அமைச்சராக இருந்து, அண்மையில் அரியலூர்மூலம் அகில உலகப் புகழ்பெற்று, இன்று 'வேதன் இட்ட வழி, நாதன் இட்ட கட்டளை' என்ற எண்ணத்தோடும், விம்மும் இதயத்தோடும் வீட்டிலிருக்கும் திரு. அழகேசனார் அவர்கள் இந்தப் பெயர் மாற்றிக் கொள்ளும் பிரச்சினை குறித்து பேசுவதிலே பேராற்றலும், பெருவிருப்பமும் கொண்டவர்!

கொண்டையழகும் கோணவகிட்டழகும் அழகல்ல,
குடுமியழகே அழகு

என்று பாசுரம் பாடி ஐம்பாலின் அழகுகளிலே பேதம் ஏற்படுத்தி மகிழுகின்ற பேதமைப் புத்தி அவரிடம் இல்லை. இந்த அழகுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக; அல்லது கருப்பொருளாக அமைந்துள்ள 'ம—ர்' தான் அவர் மனதைப் பெரிதும் கவர்ந்தது போலும். "மதியழகன் அன்பழகன் என்றெல்லாம் பெயர் மாற்றிக் கொள்கின்றார்களே; ஏன் மயிரழகன் என்று மாற்றிக் கொள்வதுதானே?" என்று தேர்தல் நேரத்தில் காஞ்சிபுரத்தில் சிறந்த ஆலோசனை ஒன்றை செப்பியதன் மூலம் தன் விவேகத்திற்கும் பண்பாட்டிற்கும் வெளிச்சம் போட்டுக் காட்டிக்கொண்டார். அதற்குக் காரணம், இரண்டாக இருக்கலாம். ஒன்று, அதன் மேல் அவர் கொண்டுள்ள அலாதியான ஆசை. இரண்டு, அவர் பெயரினுள்ளேயே அது (அளகேசன்) அடங்கியிருப்பதால் கொண்டுள்ள பாசம். இவர்களையெல்லாம் வெட்கித் தலை குனியச் செய்கின்ற புதுமைச் செய்தி—நம்மையெல்லாம் பூரிப்பில் ஆழ்த்துகின்ற சேதி ஒன்று அண்மையில் வெளி வந்துள்ளது.

★

'கூலிகளும் கோல்பிடிக்கும் தகுதி பெற்றவர்கள்' என்பதை குவலயத்தில செயல் மூலம்சித்தரித்துக் காட்டிய சிங்கார பூமி ரஷ்யா! அந்தப் பொதுவுடமை பூதலத்து மக்கள் இன்று திங்களொடும் செழும்பரிதித் தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்கும் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் படிக்க ஆசை கொண்டுள்ளார்கள். அதன் விளைவாக தமிழகத்திலிருந்து தமிழறிஞர்கள் மூவரை அழைத்துச சென்று ரஷ்யா இன்று தமிழ் படிக்கிறது. நம் உள்ளத்திற்கு உவகை சேர்க்கும். சேதி இது.

அவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பவர்கள் டில்லியால் அனுப்பப்பட்டவர்கள் அல்ல, மாஸ்கோவால் அழைக்கப்பட்டவர்கள். அவர்களுள் ஒருவரான உயர்திரு, இராம, மீனாட்சி சுந்தரம் (பிள்ளை) அவர்கள் சில சுவையான செய்திகளை மடல் மூலம் தருகிறார். லெனின் கிராடில் தானே தமிழ் படித்து தமிழ்ப் பணி புரிகிறாராம் ரூதின் என்ற இரசியர் ஒருவர். உலகின் உயர் தனிச் செம்மொழி நம் மொழியாம் தமிழ் மொழி என்று காரணங்கள் பலகாட்டி விளக்குகின்றாராம் அந்த வித்தகர். மொழியிலக்கணம் பயின்றுள்ள அவர் தமிழ் மொழியில் நன்றாகப் பேசுகின்ற ஆற்றலும் பெற்றுள்ளாராம். 1929-ம் ஆண்டிலேயே தமிழுணர்ந்த இரசியர்கள் ஏராளமாக இருந்தார்களாம்,

இவைகளையெல்லாம் கேட்கும்போது எகிப்துக்கும் சீனாவுக்கும் அரசியல் வல்லுநர்களை அனுப்பி ஏற்றம் பெற்றிருந்த பண்டைத் தமிழகத்துக் காட்சிகள் நம் மனத்திரையில் ஓடுகின்றன. இந்த இனிய சேதிகளுக்கெல்லாம் சிகரமாக இன்னொரு சேதியும் தருகிறார். ரஷ்யர்கள் தங்கள் ரஷ்யப் பெயர்களைமாற்றி தமிழிலேயே பெயர் வைத்துக் கொள்கின்றார்களாம். 'அளகேசனார்கள்' ஐயப்படக் கூடும் அங்கேயும் தி. மு க. இருக்கிறதோ என்று! அவர்கள் வேற்று நாட்டவர்கள்; விருப்போடு தமிழிலே தங்கட்கு பெயர் சூட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இன்றும் இங்கே ஸங்கரனையும், ஜெயஸ்ரீயையும், ஜமுலாவையும் தான் பார்க்கிறோம் ஐங்குன்றார், கண்ணன், பெருமாள்— என்று நல்ல தமிழில் பெயர் சூட்டி மகிழ்கிறார்கள் இரசிய நாட்டு மக்கள். 'வாழ்க அவர்கள் தமிழுள்ளம்' என்று வாழ்த்துவோம்!

சோமசுந்தரம் மதியழகனாக மாறியது குறித்து 'மயான காண்டம்' பாடிய அழகேசர் இதற்கு என்ன சொல்லப் போகிறார்?

தி. மு. கழகம் இல்லை அங்கே; இருந்தாலும் அழகேசர்களைத் திடுக்கிட வைக்கும் தமிழுணர்ச்சி அங்கே இருக்கிறது!

தி. மு. கழகம் இல்லாமல் எப்படி அங்கே பெயர்கள் மாறின?

ஒரே பதில்தான் இதற்கு: தமிழுணர்ச்சியின் முழு உருவம்தான் தி. மு கழகம்!

—நாஞ்சில் அன்பெழில்

வருந்துகிறோம்

ஏ. எல். எஸ். புரடக்ஷன்ஸ் உரிமையாளர் திரு. ஏ. எல். எஸ். சீனுவாசன், 'தென்றல்' ஆசிரியர் கவிஞர் கண்ணதாசன் ஆகியோரது அருமைத் தாயார் விசாலாட்சி அவர்கள் 23-8-57 காலை மூன்றுமணி அளவில் இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

விசாலாட்சி அவர்கள் கடந்த சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்தார்கள்.

அன்னாருக்கு மூன்று ஆண் மகவுகளும், ஆறு பெண் மகவுகளுமுண்டு. கவிஞர் கண்ணதாசன் அவர்கள் எட்டாவது குழந்தையாவார். விசாலாட்சி தனது கடைசி மூச்சுவரை தனது மூன்று புதல்வர்களுடனும் பேசிக் கொண்டிருந்தார்.

விசாலாட்சி அவர்களுக்கு வயது 67. இரண்டாண்டுகளுக்கு முன்புதான் அன்னாரது கணவர் சாத்தப்பர் சிறுகூடற்பட்டியில் காலமானார்.

அன்னையை இழந்து துயரத்திலாழ்ந்திருக்கும் தோழர் ஏ. எல். எஸ். சீனிவாசன், கவிஞர் கண்ணதாசன், கண்ணப்பன் ஆகியோருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ—ர்)

கலையரங்கம்

உதித்துவிட்டான் செங்கதிரோன் தென்திசையில்
கொதித்தெழுவோம், கொத்தடிமை தீர்வதற்கே!

வெள்ளி 30-8-57 சென்னை

எல்லையிலே தொல்லை!

தமிழக—ஆந்திர எல்லைப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட படாஸ்கர் சிபாரிசுகள் ஒரு விதத்தில மகிழ்ச்சிக் குரியதாகவும்; ஆனால் அதே நேரம் கவலை தருவதாக வும் இருக்கிறது!

—ஆனல் உத்யோகப் பூர்வமாக அவரது முடிவுகள் இன்னும் நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படாதது இந்தச் சந்தேகத்தை வலுப் படுத்துவதோடல்லாமல்; கவலையைத்தான் அதிகப்படுத்துகிறது.

இப்போது உலவுகிற வதந்தியின்படி திருத்தணி நகர் உட்பட திருத்தணி தாலுக்காவில் 310 சதுரமைல பிராந்தியத்தை சென்னைக்கு வழங்க வேண்டுமென்று அந்த அறிக்கை குறித்திருக் கிறதாம்.

சேலம் மாவட்டத்திலுள்ள ஓசூர் தாலுக்காமீது ஆந்திரா உரிமை கொண்டாடுவதை படாஸ்கர் ஒப்பவில்லையாம்.

—பூகோள ரீதியில் ஆந்திர மாநிலத்துடன் அந்தத் தாலுக்காவிற்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை என அவர் எடுத்துக்காட்டியிருக்கிறாராம்!

—ஆக; ஓசூரைப் பொறுத்தவரையில் இப்போதுள்ளபடியே நிலைமைகள் இனியும் இருந்துவரும் என்று நம்ப இடமிருக்கிறது.

ஆனல் அதே நேரம் இதில் திடுக்கிடும் செய்தி என்னவெனில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பொன்னேரி, திருவள்ளூர் தாலுக்காவின் 310 சதுரமைல் பிராந்தியத்தை ஆந்திர மாநிலத்திற்கு மாற்ற வேண்டும் என்றும் படாஸ்கர் சிபார்சு செய்திருக்கிறாராம்!

—இந்த முடிவு அனைத்தும் உண்மையாக இருக்குமோ என்கிற அதிர்ச்சி தமிழர் அனைவரையும் கலங்க வைத்திருக்கிறது என்றே கூற வேண்டும்!

உண்மையில் ஆராயப் புகுந்தால் பொன்னேரி—திருவள்ளூர் தாலுக்காக்களைத் துண்டாடுவதற்கு எந்தவித நியாயமும் இருப்பதாகத் தோன்றவில்லை.

அந்தத் தாலுக்காக்களில் இது நாள்வரை மொழிப் பிரச்சினை குறித்து ஒன்றுமே மனமாச்சரியங்கள் எழுந்ததில்லை.

அங்கு வாழ்கின்ற தெலுங்கு பேசுவோரும் தமிழரும் மொழிவேறு சிறிதுமின்றி; எல்லைப் பிரச்சினைகளுக்கெல்லாம் அப்பால் ஒன்றித்தான் வாழ்ந்து வருகிறார்கள்.

இது குறித்து செங்கற்பட்டு மாவட்ட சட்டசபையாளர்களின் சிறப்புக் கூட்டம் நிலைமையைத் தெளிவாக்கியிருக்கிறது.

அந்தச் சிறப்புக் கூட்டத்தின் தீர்மானம் குறிப்பிடுகின்றன:

"திருவள்ளூர், பொன்னேரி தாலூக்காக்களில் உள்ள மக்கள் தங்களது கிராமங்களில் எதவும் ஆந்திராவுக்கு மாற்றப்படுவதை விரும்பவில்லை என்பதை கண்டறியப்பட்டிருக்கிறது. இரு பாஷை பேசுவோர் செங்கல்பட்டு ஜில்லாவில் ஒற்றுமையாக வாழ்ந்து வருவதைக் கண்டு அவர்கள் பெருமை கொண்டிருக்கின்றனர். தெலுங்கு ஜனத் தொகையினரின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களது நன்மைக்காக விசேஷப் பள்ளிகள் முதலியவை திறக்கப் பட்டிருக்கின்றன.

"ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களில் ஊறிப் போயிருக்கும் மக்களைப் பிரித்து, புதிய இடத்துக்கு அனுப்புவதானது சமூகத்துக்கே விபரீத விளைவை ஏற்படுத்துவதாக இருக்கும். இந்த ஜில்லாவின் தென் தாலூக்காக்களில் வசிக்கும் மக்கள் எஞ்சிய சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிக்க முடியாதபடி கலாச்சார 'சமூக' பொருளாதாரத் தொடர்பால் பிணைக்கப் பட்டிருக்கின்றனர் என்பதை உணர வேண்டும்."

—தீர்மானம் பொன்னேரி—திருவள்ளூர் தாலூக்காக்களைப்பற்றி மேம்போக்காக வாதத்தைமட்டும் தரவில்லை. ஆழ்ந்து சென்று அந்தத் தாலுக்காக்களின் பொருளாதாரத்தையும்; அந்தத் தாலுக்காக்களிலிருந்து கிராமங்கள் சில ஆந்திரத்திற்கு மாற்றப்பட்டால் அதனல் அது சென்னையின் பொருளாதார சீரமைப்பிற்கு விளைவிக்கும் ஊறு பற்றியும் அது தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது:

"இந்த ஜில்லாவில் உருப்படியான ஒரே திட்டமும் (ஆரணியாறு திட்டம்) மற்றொரு ராஜ்யத்துக்குப் போய்விடும் என்றும், ஆயக்கட்டு, கிராமங்கள் மட்டும் தொடர்ந்து இங்கு இருக்கும் என்றும் கூறப்படும் வதந்தி ஆழ்ந்த கவலையளித்திருக்கிறது. இந்தத் திட்டம் ஆந்திராவுக்கு ஒதுக்கப்பட்டால், இந்த ஜில்லாவின் பொருளாதார நிலைமை மோசமடையும் என்று அஞ்சுகிறோம். ஆந்திராவுக்கு மாற்ற உத்தேசிக்கப்படும் கிராமங்கள் பிரதானமாகத் தமிழ் கிராமங்களே."

—செங்கற்பட்டு மாவட்டத்தில் வாழ்வோருக்கு ஏற்பட்டிருக்கிற இவ்வளவு குழப்பங்களும் படாஸ்கர் சிபார்சுகளைப் பற்றிய வதந்தியினல் வந்த விளைவாகும்.

—இவைகளுக்கெல்லாம் இடமில்லாமலேயே போயிருக்கும் படாஸ்கரின் அறிக்கை அரசாங்கத்தினரால் வெளியிடப்பட்டிருந்தால்!

ஆனல் ஆட்சியாளர்களோ அது குறித்து வாளாவிருக்கின்றனர்.

எப்போதுமே இதுபோன்ற விஷயங்களில் சம்பந்தப்பட்டவர்கள் தங்களது அறிக்கையை அரசாங்கத்திற்குக் கொடுத்தவுடன் அவைகளை வெளியிடுவதுதான் முறையாகவும்; வழக்கமாகவும் இருந்து வந்திருக்கிறது.

உதாரணமாக; முன்பு பெரிதாக இருந்த சென்னையிலிருந்து ஆந்திராவைப் பிரிப்பதற்காக நியமிக்கப்பட்ட வாஞ்சு, மிச்ராவின் அறிக்கைகள் அவர்களுடைய சிபார்சுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கு முன்னமேயே வெளியிடப்பட்டிருக்கின்றன!

அதைப்போலவேதான் மாநிலச் சீரமைப்புக் குழுவின் அறிக்கையும் முன்னதாகவே வெளியிடப்பட்டிருக்கிறது!

—அப்படி அவைகளைப் பிரசுரித்தால்தான் அரசாங்கம் தன்னுடைய சொந்த முடிவைத் தீர்மானிப்பதற்கு முன்பு பொதுமக்களது கருத்தினைத் தெரிந்துகொள்வதற்கு தக்க வாய்ப்பு கிடைக்கும். இது தான் ஜனநாயக முறையுங்கூட!

—ஆனல் இந்த முறையோ அரசாங்கம் வழக்கத்தைத் தலைகீழாக மாற்றி வட்டு கொடுக்கிறது.

—பொதுமக்கள் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளாமல்; திரைமறைவில் ரகசியமாக முடிவு செய்துகொண்டு; அந்த முடிவினை எப்பாடுபட்டாவது; எந்தவித வழிகளைக் கடைபிடித்தாவது திணித்துவிடுவது என்பது ஜனநாயகத்திற்கு குழிபறிக்கும் செயலாகும்!

—அரசாங்கம் இந்த அடாத செயலில் ஈடுபடுவது தகாது; முறையாகாது—என்று கண்டனம் செய்ய விரும்புகிறோம். இப்படிச் செய்யப்படும் முடிவு ஜனநாயகத்தின்பாற்பட்டதன்று—என எச்சரிக்கவும் ஆசைப்படுகிறோம்!

எனவேதான் நீங்களாகவே முடிவெடுக்கும் முன்னர் கிராம வாரியாக சம்பந்தப்பட்ட தாலுக்காவின் பொதுமக்களைக் கலந்துகொள்ளுங்கள்; அவர்களுடைய சேர்ந்து வாழும் எண்ணத்தில் மண்ணைப் போடாதீர்கள்—என்றும் வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

★ ★ ★

'கூந்தல் முடிக்கும்' நாள் வரும்- கொடுமையாளரே! உணர்வீர்!

❀ 10-ம் பக்கத் தொடர்ச்சி

தாகி விட்டது! கடைசியிலே அவர்கள் கண்ணீர்விட்டு, இனி மேல் எங்களுக்கு வீடும் ஒன்று தான்; ஜெயிலும் ஒன்றுதான்—ஏர் பிடித்த கையிலே ஏர் இல்லையென்றால் இந்தக் கையைத் தலைமேல் வைத்துக் கொண்டாலும் ஒன்றுதான்; வயிற்றிலே அடித்துக் கொண்டாலும் ஒன்றுதான். குழந்தையைத் தடவிக் கொடுத்தாலும் ஒன்றுதான் — என்று சொல்லத்தக்க அளவிற்கு மனம் உடைந்த நிலைமையில் இருக்கின்றார்கள்.

"ஆற்று வெள்ளத்திலே அமைதி கிடைக்காதா?"

என்னுடைய நண்பர் அன்பில் தருமலிங்கம் என்னிடத்திலே சொன்னார்; அந்த நேரத்தில் என்னுடைய மனம் பாகாக உருகிற்று! இங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் கும்பலாகக்கூடி, "ஐயா, எங்களைக் காப்பாற்ற முடியா விட்டாலும், உரிமைகளை வாங்கிக்கொடுக்க முடியா விட்டாலும், ஒரு நாள் குறிப்பிடுங்கள்; வேலை இழந்து வேதனையில் ஆழ்த்தப்பட்டு, காப்பாற்றுவாரற்று கைவிடப்பட்டிருக்கின்ற நாங்கள் காவிரியாற்றிலாவது மூழ்கிச் சாகிறோம். அதையாவது கரையோரத்தில் இருந்து கண் குளிரக் காணுங்கள்! அதிகாரிகளை வரவழைத்து பார்க்கச் சொல்லுங்கள்!" என்று அவர்கள் அழுதார்களாம்.

பாரதம் போதிக்கும் நல்ல பாடம்!

என்னுடைய நண்பர் கருணாநிதி உங்களிடத்திலே பாரதத்தை எடுத்துச் சொன்னதில், எப்படி ஏன் சொன்னார் என நீங்கள் யோசிக்கலாம். பாரதமாவது நங்கவரம் பண்ணைக்கு நல்ல பாடம் கொடுக்கட்டும் என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னார். பாரதத்தில் துரெளபதி துகில் உரியப்பட்டு தலைவிரி கோலமாக ஓடி வந்த நேரத்தில், கதையைக் கையிலே வைத்துக் கொண்டிருந்த பீமனும், அர்ஜுனனும், பற்பல வித்தைகளிலே தேறிய தருமனும், நகுலனும், சகாதேவனும் என்ன செய்யலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்களாம். அந்த நிலைமையில் இன்று நாங்கள் இருக்கிறோம். துரெளபதி துகில் உரிதல் என்று சொன்ன காரணத்தால் அப்படியானால் விவசாயிகள் உங்களுக்கு மனைவிகளா என்று கேட்க வேண்டாம். உவமை என்பது அடிப்படைக்குத்தான் பொருந்துமே தவிர அத்தனைக்கும் சேர்ந்து அல்ல. 'ஏதும் செய்ய முடியாத நிலையிலே அவர்கள் தவித்ததைப்போல், திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைய தினம் தவிக்கிறது. கடைசியில், யார் தன்னுடைய துகிலை உரியச் சொன்னானோ அந்தத் துரியோதனனுடைய ரத்தத்தைத் தான் தைலமாகப் பூசினால்தான் தன் கூந்தலை முடிப்பேன் என்று திரெளபதி சொன்னதாக பாரதம் சொல்லுகிறது! அதைப்போல் நமக்கும் ஒரு நாள் வரும்! கூந்தல் முடிக்கின்ற நாள்—நாட்டு மக்களாக நம்மிடம் அதிகாரத்தைத் தருகின்ற நாள்!

பொது மக்களுக்கு வேண்டுகோள்!

எப்பொழுதும் கிளர்ச்சியில் ஈடுபடுகின்றவர்கள் பத்து பேர் இருப்பார்கள்; அதை வேடிக்கைப் பார்ப்பதற்கு பத்தாயிரம் பேர் வருவார்கள்! பல கிளர்ச்சிகளில் தொல்லை வருவதற்குக் காரணம் வேடிக்கைப் பார்க்க வருகின்ற பத்தாயிரம் பேரால் தான்! அவர்களுக்கு நான் பணிவன்புடன் சொல்லிக் கொள்ளுவேன், விவசாயத் தோழர்கள் நாளைய தினம் அறப்போரிலே ஈடுபடும் நேரத்தில் விளைவு எப்படியிருந்தாலும், கண்ணியம் கெடத்தக்க அளவிற்கு எந்தக் காரியத்திலும் ஈடுபடக்கூடாது. தடி பலாத்கார வாடை வீசினாலும், நான் நிச்சயமாக விவசாய சங்கத்தாருக்குச் சொல்லி கிளர்ச்சியை நிறுத்திவிடச் சொல்வேன்.

ஆனால் எந்த கிளர்ச்சியிலும் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் பலாத்காரத்தில் ஈடுபடுவதில்லை. பார்வையாளர்கள், ஆர்வம் மிகுந்தவர்கள், ஆதரவு தர இருப்பவர்கள்தான் கட்டுக்கடங்காமல் சில வேலைகளில் நடந்து கொள்ளுகிறார்கள். அவர்களைக் கட்டுக்கு அடங்கும் படியாக இருக்கச் செய்கின்ற பொறுப்பு பெரியவர்களுக்கும், தொண்டர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்களுக்கும் இருக்கிறது. போலீஸ்காரர்கள் அங்கே அடிக்கின்ற நேரத்தில் அங்கே இருப்பவர் 'அடிக்காதே! அடிக்காதே!' எனக் கூச்சல் போட்டால் போலீஸ்காரர் அடிக்காமல் இருக்கமாட்டார்கள்! அந்த அளவிற்கு இருப்பதல்ல போலீஸ்! போலீஸ்காரர்களுக்கு வேலூரிலே இருக்கும் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கும் பாடமே அடிக்கும்போது பாதி கண்ணை மூடிக் கொள்—என்பதாகும். ஏனென்றால், போலீஸ் வேலையில் இருக்கின்ற அண்ணன் விவசாய வேலையில் இருக்கின்ற தம்பியை அடிக்க நேரிடலாம். அதற்குப் பிறகு அண்ணியேகூட இராத்திரி பத்து அரைத்துப் போடலாம் உடைபட்டத் தலைக்கு!

அதனால்தான் அறப்போர் நடைபெறும்போது அடக்குமுறைகள் வீசப்பட்டால், அமைதியுடனிருந்து நாம் நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள் என்பதை நிலை நாட்ட வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

'நான்' என்றால் அதில் இருக்கின்ற பொருளை தயை செய்து நங்கவரம் பண்ணை தெரிந்து கொள்ள வேண்டும்! நான் என்றால் 'அனாவசியமான கிளர்ச்சியை ஆதரிக்காதவன்' என்று பொருள்! 'சட்டத்திற்குட்பட்டு மக்கள் நடக்க வேண்டும் என்ற சன்மார்க்கத்தைப் போதிப்பவன் என்றுபொருள்! 'அமைதியான அரசியல் தேவை என்று கருதுபவன்' என்று பொருள்! அதே நேரத்தில், 'இத்தனைக்கும் ஒரு பிரச்சினை பரிகாரம் தராவிட்டால், கடைசியில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்பதை நெஞ்சில் கொண்டு, மக்கள்போராட வேண்டும் என்ற தத்துவத்தையும் கொண்டவன்' என்பதை நங்கவரம் பண்ணை நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்! அவர்கள் உங்களுக்காக உழைத்தவர்கள்; இனியும் உங்களுக்காகத்தான் உழைப்பார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, அவர்களுடைய குறைந்தபட்சக் கோரிக்கையை ஏற்று, நாளை நடக்கும் அறப்போர் நடக்காமல் செய்வார்களானால் நங்கவரம் பண்ணையைப் போல் வேறு ஒன்று இல்லையென்ற நல்ல பெயர் எடுக்கலாம்!

நாமும் கூட்டமாகக் கேட்டுக் கொண்டோம்; மனுக்கள் மூலம் கேட்டுக் கொண்டோம்; சர்க்காரிடத்திலே கருணாநிதி ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் பார்த்துக் கேட்டு விட்டார்; பத்திரிகையிலே கேட்டோம்; சட்டசபையிலே வேண்டுகோள் விட்டோம்; இதோ, கடைசி நேரத்திலே கூட கூட்டம்போட்டு வேண்டுகோள் விடுகிறேன்!...

நான் நங்கவரம் பண்ணையைப் பார்த்ததில்லை. நங்கவரம் பண்ணை கிழக்கே இருக்கிறதா; மேற்கே இருக்கிறதா? அங்கு யார் இருக்கின்றார்கள்—என்பதும் எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் அவர்கள் இருக்கின்ற திக்கு நோக்கி, வேண்டுகிறேன்—இக்கடைசி நேரத்திலாவது ஏழை மக்களை மதித்து, அவர்களுடைய கண்ணீருக்குக் கண்ணியம் அளித்து, இந்தக் கடைசி நேரத்திலேயாவது பண்ணையார் மனம் திருந்தி நேர்வழிக்கு வர வேண்டும் என்று 'கடைசி வேண்டுகோள்' விடுத்து என் உரையை முடிக்கிறேன். ●

விற்பனையாகிறது!

மு. கருணாநிதி தீட்டிய

மணிமகுடம்

ரூ. 1—8—0

★

மாறன், எம். ஏ. தீட்டிய

"ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?"

ரூ. 1—8—0

★

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி., பி. டி. தீட்டிய

அபிசீனிய அடிமை

ரூ. 1—0—0

★

முத்துவேல் பதிப்பகம்,

11, மதுரை ரோடு, திருச்சி—8

சென்னையில் கிடைக்குமிடம் :—

பாரி நிலையம், பிராட்வே, சென்னை—1

மலர் நிலையம், பிராட்வே, சென்னை—1

சாந்தி நூலகம், பிராட்வே, சென்னை—1

சுதேசமித்திரன்—ஹிகின் பாதம்ஸ் ரயில்வே புத்தகக் கடைகள்.

கடைசி வேண்டுகோள்

அறிஞர் அண்ணா

23—8—57 அன்று நங்கவரம் உழவர் போராட்டம் துவங்குவதற்கு முன்னுள் நங்கவரம் பண்ணையாரோடு கடைசி நிமிட சமரசப் பேச்சு நடைபெற்றது. பண்ணையார் ஒருவித சமரசத்துக்கு வருவார்; போராட்டத்துக்கு அவசியமே இருக்காது—என்றுதான் நாடு எதிர்பார்த்தது. ஆனால் பண்ணையாரின் பிடிவாதம் அதற்கு இடந்தரவில்லை. பேச்சு வார்த்தைகள் முறிந்துவிட்டன. இதன் பிறகுகூட அறிஞர் அண்ணா அவர்கள் நம்பிக்கையோடு குளித்தலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிடிவாதத்தைக் கைவிடும்படி பண்ணையாருக்குக் **'கடைசி வேண்டுகோள்'** விடுத்தார்கள். அந்தத் தலைப்பில் அண்ணா அவர்கள் நிகழ்த்திய விளக்கம் நிரம்பிய—உருக்கமான சொற்பொழிவைத்தான் இங்கே தருகிறோம்!

தலைவரவர்களே!

தோழர்களே!

விவசாயிகளின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தை இங்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வட்டாரத்திலே ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி பற்றியும், அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் எத்தனை பெரிய வேதனையிலே ஆழ்த்தப் பட்டிருக்கின்றார்கள் என்பதைக் குறித்தும், அந்த வேதனையைத் துடைப்பதற்காக எந்தெந்தவிதமான நியாயமான முறைகளையெல்லாம் இதுவரை கையாண்டு பார்த்தார்கள் என்ற தகவலையும், அத்தனை முயற்சிகளும் தோற்றுவிட்டன என்ற சோகக் கதையையும், அதன் பிறகு அறப்போர் நடத்துவதைத் தவிர வேறு எந்த வழியும் தென்படவில்லை என்பதைப் பற்றியும் எனக்கு முன்னாலே பேசிய நண்பர் கருணாநிதியும், அம்பில் தர்மலிங்கமும் எடுத்துக் கூறினார்கள்.

இன்றைய கூட்டம் திராவிட முன்னேற்றக் கழகம் வழக்கமாக எடுத்துக் கூறுகின்ற திராவிட நாட்டுப் பிரிவினையைப்பற்றிப் பேசுவதற்காக அமைக்கப்படவில்லை. புதிதாக இந்த வட்டத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி பற்றியும், அந்தப் பிரச்சினையை இந்த வட்டாரத்துப் பிரதிநிதி என்கிற முறையிலே கருணாநிதியும், அவர் சார்ந்திருக்கிற இயக்கத்திலே உள்ளவன் என்கிற காரணத்தால் நானும் பொது மக்களுக்கு எடுத்து விளக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கடைசி வேண்டுகோள்!

இந்தக் கூட்டத்தில் நான் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற தலைப்பு "கடைசி வேண்டுகோள்" என்பதாகும்.

இந்தக் கடைசி வேண்டுகோள் என்பது உண்மையில் எழுத்துக்காக மட்டும் ஏற்பட்டதல்ல; என்னுடைய உண்மையான எண்ணத்தை ஆட்சியாளருக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற கருத்துடனேயே இந்தப் பணிவான தலைப்பை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். இந்தக் கூட்டத்திற்கு வருவதற்குக்கூட சிறிது தாமதமாயிற்று! அந்த நேரத்தில்கூட நான் எனது கடைசி வேண்டுகோளை—இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே பேசிக்கொண்டு இருந்து பார்த்து—அவர்களால் 'முடியாது' என்ற நிலைமை தெரிந்த பிறகு உங்களைச் சந்திக்கிறேன்.

முயற்சிகள் முறிந்தன; முடிவிலே அறப்போர்!

கூட்டத்திற்கு வருவதற்கு சில விநாடிகள் முன்னால் வரை, இந்தப் பிரச்சினை போராட்டம் இல்லாமலேயே தீர்க்கப்பட வேண்டுமென்பதற்கு நானும், என்னைச் சார்ந்த நண்பர்களும் பலமான முயற்சிகளை எடுத்துக் கொண்டதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் அநாவசியமான போராட்டங்களைக் கிளப்புவதும் இல்லை; காரணமற்ற போராட்டங்களுக்கு ஆதரவு அளிப்பதுமில்லை! அப்படி ஒரு பொறுப்புள்ள — சட்டத்தை மதிக்கின்ற—சமாதானத்தை விரும்புகின்ற — அமைதியை நிலைநாட்டுகின்ற அமைப்பாக தமிழகத்திலே எழிலோடு வளர்ந்துகொண்டு வருகிறது. அதற்குக் குந்தகம் விளைவிக்கின்ற, தன்மையில் எந்த நேரத்திலும் நடந்துகொள்ளக் கூடாது என்ற பொறுப்புணர்ச்சியினாலேயே கடைசி விநாடி வரையில் வேண்டிக் கேட்டோம். அந்தக் கடைசி வேண்டுகோளும் நிராகரிக்கப் பட்டுவிட்டது என்பதை மிகவும் வருத்தத்தோடு உங்களிடையே தெரிவித்துக் கொள்கிறேன்.

"அப்படியானல், அண்ணாதுரை! இனி நீ பேசி என்ன வேண்டுகோள் விட முடியும்?" என்று நீங்கள் கேட்கலாம். நான் இந்தக் கூட்டத்திலே மூன்று சாராருக்கு வேண்டுகோள்விட எண்ணுகிறேன்

ஒன்று, நங்கவரம் பண்ணைக்கு;

மற்றொன்று, நாட்டை ஆளுகின்ற சர்க்காருக்கு!

அடுத்தது, பொது மக்களாகிய உங்களுக்கு!

முடிவில், திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஈடுபாடு கொண்டுள்ளவர்களுக்கு!

வேண்டுகோள்கள் விடுப்பதற்கு முன்னால், இந்த நிலைமை ஏன்—எப்படி ஏற்பட்டது என்பது உங்களுக்குப் புரிய வேண்டுமென்பதற்காக ஒரு எடுத்துக்காட்டு சொல்லுகிறேன்:

'பச்சை வெட்டு' மருந்து–ஆட்சியாளரின் சட்டம்!

ஒரு வைத்தியன் நோய் பிடித்தவனுக்கு மருந்து கொடுத்தான். அந்த மருந்து 'பச்சை வெட்டு' மருந்தாக இருந்த காரணத்தால், பழைய நோயும் போகாமல், புதிதாகக் கைகால் இழுத்துக் கொண்டது. அதற்குக் காரணம் மருந்திலேதான் கோளாறு என்று கண்டு கொண்ட அந்த நோயாளி, நகர்ந்துகொண்டே வைத்தியனிடத்திலே சென்று "ஐயா, உங்கள் மருந்தால் என் பழைய நோயோடு புதிதாகக் கால் கை பிடிப்பும் ஏற்பட்டு விட்டதே! என்ன செய்வது?" என்று கேட்டான்.

அதற்கு வைத்தியன் சொன்னான்: "நானும் வைத்தியத்திற்குப் புதிது; உனக்கோ நோயும் புதிதாக வந்தது; என்னுடைய மருந்தோ பச்சை வெட்டு! ஆகவே கைகால் பிடிப்பு இருந்தால் கொஞ்ச காலத்திற்குப் பொறுத்துக் கொள்!" என்று சொன்னான். அதைத்தான் காமராசர் குளித்தலையிலே சொன்னார்!

தான் போட்ட சட்டத்திலே ஓட்டை இருக்கிறது—என்று ஒப்புக் கொள்கின்ற ஒரு முதன் மந்திரியை தமிழகம் மட்டுமல்ல; உலகமே இன்றுதான் முதல் தடவையாக சந்திக்கிறது. எந்த முதல் மந்திரியும் தனது சட்டம் அப்பழுக்கற்றது—என்று ஒப்புக்காகவாவது வாதாடுவார்கள், ஆனால் நமது காமராசர் கள்ளங் கபடமற்ற உள்ளம் படைத்தவர். ஆகவே தனது சட்டத்திலே ஓட்டை இருக்கிறது என்பதை மறுக்கவில்லை. அந்த ஓட்டைக்குள்ளே புகுந்து மிராசுதாரர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள முயற்சிப்பது மாபெரும் பாதகம் என்று அறிவுரை பகர்ந்திருக்கிறார். அதே நேரத்தில் 'மிராசுதாரர்கள்தான் அப்படிச் செய்கின்றார்கள் என்றால், நீங்களும் ஏன் தொல்லைக்கு வருகிறீர்கள்? கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்!' என்று விவசாயிகளிடம் விசாரக் குரலிலே எடுத்துப் பேசி இருக்கிறார்.

ஏன் திருத்தவில்லை, ஓட்டையான சட்டத்தை?

நான் சொன்ன வைத்தியனுடைய கதையை நீங்கள் மறுபடியும் தொடர்ந்து பார்த்தால், "நான் கொடுத்த மருந்தாலேதான் கைகால் இழுத்துக் கொண்டது அது ஊராருக்குத் தெரிந்தால் எனக்குக்

'அவர்கள்' பெரியவர்கள்தான்-காமராசரே, தெரிந்து கொள்வீர்!

கெட்ட பெயர்! ஆகவே அது தீருகின்ற வரையில் நீ எங்காவது ஒரு மூலையில் முடங்கிக்கிட! அதுதான் நீ எனக்குச் செய்யக்கூடிய நன்மை!'' என்று 'வைத்தியன் நோயாளிக்குச் சொல்வதுபோல்- இந்த ஏழைப் பாட்டாளி மக்களுக்குக் காமராசர் சொல்லுகின்றார், "என் சட்டத்தில் இருக்கும் ஓட்டையை அடைக்கின்றவரையில் சும்மாதான் இருந்து தொலையுங்களேன்!' என்று.

நான் இதிலே அரசியல் கண்ணோட்டத்தோடு பேசுகின்றேன்'—என்று காமராசர் குற்றம் சாட்ட விரும்புகின்றார். நான் அதைக் குற்றச் சாட்டாகக் கருதவில்லை; பெருமை என்றே கருதுகிறேன் அரசியல் கண்ணோட்டத்தோடு அந்தச் சட்டத்தை நாங்கள் பார்க்கிறோம். விவசாயப் பிரச்சினையை மட்டுமல்ல; ஒரு நாட்டை ஆளுகின்ற முதல் மந்திரிக்குச் சட்டங்களை எழுத வேண்டிய பொறுப்பும், சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய கடமையும் வருகின்ற நேரத்தில், அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவதற்கு பெரிய பெரிய சட்ட நிபுணர்கள் மந்தை மந்தையாகச் சென்னையில் இருக்கிறார்கள். சர்க்கார் இலாக்காவில் 'லீகல் செக்ரட்டரி' இருக்கிறார். சட்ட நிபுணத்துவத்தை அறிந்திருக்கின்ற அதிகாரிகள் இருக்கின்றார்கள். அவர்களைப் பார்த்துக் கேட்க விரும்புகின்றேன், உங்களுடைய சட்டம் ஓட்டையானதற்குக் காரணம் நீங்கள் சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசிக்காததாலா; அல்லது ஆலோசித்த பிறகும் இந்த ஓட்டை விழுந்ததென்றால், அவர்கள் அத்தனை பேரும் அவ்வளவு மட்டமானவர்களா—என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

ஓட்டை நிறைந்த ஒரு சட்டத்தை நாட்டிலே ஏற்படுத்துவதற்கும், எகிப்து நாட்டில் வெடிக்காத வெடி குண்டுகளை பரூக் மன்னன் வாங்கி, தன்னுடைய பட்டாளத்திலே கொடுத்து அதை வைத்துக்கொண்டு எதிரிகளின்மீது படையெடுத்துச் செல்லும்படி ஏவி படையெடுத்த எகிப்திய மக்கள் குருவி கீழே விழுவதுபோல் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

எங்கே போயிற்று, நியாய புத்தி?

ஒரு அரசு நாணயமாக, நியாயமாக, நேர்மையாக, அறநெறியிலே நடைபெறுகின்றது என்பதிலே எவ்வளவு பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டுமோ—அத்தனை பெருமையும் சட்டத்தை அப்பழுக்கின்றி நிறைவேற்றுவதிலேதான் இருக்கிறது!

கடையிலே போய் நீங்கள் சரக்கு வாங்குகின்ற நேரத்தில் 'நான் வீசைக் குண்டைப் போடுவதற்குப் பதிலாக தவறி அரை வீசைக் குண்டைப் போட்டுக் கொடுத்து விட்டேன்!'' என்று கடைக்காரன் சொன்னால், கடையிலே சாமான் வாங்குகிறவர்கள், "சரி சரி!" என்று சும்மாவா விடுவார்கள்! 'இதுகூடத் தெரியாத உனக்கு ஆண்டவன் கொடுத்த இரு கண்கள் ஏன்?'' என்று கேட்க மாட்டார்களா? அதைப் போலவே ஓட்டை நிறைந்த சட்டத்தைப் போட்டு வைத்துக் கொண்டு ஒய்யாரமாக ஊர்வலம் வருகின்ற இந்த நாட்டு முதலமைச்சரை நான் கேட்கின்றேன், அப்படி ஏன் போட்டீர்கள்? சட்டத்தில் ஓட்டை என்று தெரிந்ததே. உடனே அதை அடைப்பதற்கு ஒரு அவசரச் சட்டம் கொண்டுவர முடியாவிட்டாலும், அந்தச் சட்டத்தினுடைய சந்து பொந்துகளிலே நுழைகின்ற மிட்டாதார்களையும், மிராசுதார்களையும், அவர்கள் எட்டி இருந்தாலும்கூட கிட்டே அழைத்து, முடிந்தால் நல்ல புத்தி சொல்லி, வீரமிருந்தால் ஆண்மையோடு அறிவுரை பகன்று, "என் சட்டத்திலேயிருக்கின்ற ஓட்டையிலே புகுந்து நீ வெளியே வந்தாலும், நான் உன்னைத் தப்ப விடமாட்டேன்!'' என்று ஏன் நியாய புத்தியோடு பேசியிருக்கக் கூடாது?

'யார் பெரியவர்?' என்பதல்ல பிரச்சினை!

அதை மறந்தார் காமராசர். 'இந்தப் பிரச்சினையிலே கருணாநிதி பெரியவரா; கல்யாண சுந்தரம் பெரியவரா—என்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது'—என்று பேசி விட்டுப் போனார்.

நீங்கள் போட்டிருக்கிற சட்டத்தைப் பார்த்தால் கருணாநிதி பெரியவரா; கல்யாண சுந்தரம் பெரியவரா—என்ற பிரச்சினை எழவில்லை. உங்களைவிட அந்த இரண்டு பேரும் பெரியவர்கள் என்பது நாட்டுக்கே நன்றாகத் தெரிந்துவிட்டது.

நாடும், நாகரிக நல்லரசு நடத்துகிறவர்களும் சட்டத்து ஓட்டைக்கு யார் காரணம் என்று பார்த்தால்—இவ்வளவு பெரியவர்; கல்யாண சுந்தரத்தைவிட கனமானவர்; நிச்சயமாக கருணாநிதியைவிட உயரமானவர் உடலமைப்பில்—இவர் சொல்லுகிறாரே அந்த இருவருக்குள் போட்டியிருப்பதாக; ஆனால் சட்டத்தைப் பார்த்தால், நிச்சயமாக இந்த இரண்டு பேரைவிட காமராசர் ஆட்சி மிக மிக மட்டமாக இருக்கிறது—என்று நிச்சயமாகத் தீர்ப்பளிப்பார்கள்!

சிங்கங்களின் முடிவு சுண்டெலிக்குப் பாடம்!

இந்த விவசாயப் பிரச்சினைக்கு எப்படி முடிவு கிடைக்கிறதோ அது ஒரு புறம் இருக்கட்டும். விவசாயப் பெருங்குடி மக்கள் பேரிலே பழி தீர்த்துக்கொள்ளவேண்டும் என்கிற மிராசுதார்களை இயக்கங்கள் சும்மா விட்டுவிடலாம்; கருணாநிதி சும்மா விட்டுவிடலாம்; கல்யாண சுந்தரம் சும்மா விட்டுவிடலாம்; ஆனால் எச்சரிக்க விரும்புகின்றேன், காலம் அவர்களைச் சும்மா விட்டுவிடாது! ஜாரிடத்திலே இருந்த பலத்தைவிட இன்றைய தினம் நங்கவரத்தில் கனவு காலத்திலேகூட பலம் கிடைக்க முடியாது! ஜார் மன்னனிடத்திலே இருந்த படை பலத்தை இன்றைய தினம் படித்தால்கூட, படிக்கின்றவனுடைய கை உதறும்; படிக்கின்றவனுடைய மனம் உதறும்; அப்படிப்பட்ட படை பலத்தை ஜார் மன்னன் பெற்றிருந்தான். அவனுடைய புதை குழியிலே இன்றைய தினம் வேற்றுக் கட்சிகளின் கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருக்கிறது. நங்கவரம் பண்ணையென்பது ஜார் ஆட்சியுடன் ஒப்பிட்டால் சுண்டெலிக்குச் சமானமாயிற்றே!

விவசாயிகள் பிரச்சினையில் எத்தகைய முடிவு கிடைக்கும்; எத்தகைய பரிகாரம் தேடப்படும்—என்பதைக்கூட பின்னாலே பார்த்துக் கொள்ள விரும்புவதெல்லாம், இந்த நாட்டை ஆளுகிற சர்க்கார்—ஏழை மக்களுக்காகப் பரிந்து பேசுகிறோமென்று சொல்லுகிற சர்க்கார்—விவசாயப் பெருங்

வடாற்காடு மாவட்ட 3-வது
தி. மு. க. மாநாடு
★
செப்டம்பர் 21, 22, தேதிகளில்
திருவண்ணாமலையில்
சாமி அரங்கில் நடைபெறும்.
★
21 - 9 - '57
இந்தி எதிர்ப்பு மாநாடு
தலைவர் :
1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சர்வாதிகாரியாகப் பணியாற்றிய
சுவாமி அருணகிரிநாதர்
திறப்பாளர் :
சி. வி. எம். அண்ணாமலை
22 - 9 - '57
தி. மு. க. மாநாடு
தலைவர் :
அன்பில் தர்மலிங்கம்
திறப்பாளர் :
கிருட்டிணமூர்த்தி பி. ஏ. (ஆனர்ஸ்)
அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர்
நாவலர் நெடுஞ்செழியன்,
மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்ளுகிறார்கள்.
இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு!
கட்டணம் : ரூ. 5, 3, 1.
அனைவரும் வருக!
ப. உ. சண்முகம் எம். எல். ஏ.
மா. பா. சாரதி எம். எல். ஏ.
(செயலாளர்கள்)
முல்லை சத்தி
(வ. கு. தலைவர்)

தாழ்ப்பாள் இல்லாத கதவு- காமராசர் போட்ட சட்டம்!

குடி மக்களுக்கு நாங்கள்தான் உண்மையான பிரதிநிதிகளாகும் என்று நாட்டிலே பறைசாற்றிக் கொண்டு வருகின்ற சர்க்கார்—நாங்கள்தான் 60-40 என்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்; அந்த வரத்தைக் கொடுத்தோர் நாங்களே என்று நாடு பூராவிலும் சுற்றிப் பேசி வருகின்ற சர்க்கார்—அது போட்டிருக்கின்ற சட்டத்தில் நான் முன்னாலே சொன்ன கதையைப்போல் பசீசை வெட்டு மருந்தாக இருந்த காரணத்தால் கைகால் இழுத்துக் கொண்டதுபோல், ஓட்டை நிறைந்திருப்பதால் இங்கே இருக்கின்றவர்கள் அதற்குள்ளே புகுந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

ஆட்சியாளரிடம் பணிவான வேண்டுகோள்

ஆகையினாலே நான் அவசர அவசரமாக—பணிவன்போடு—பொறுப்புள்ள ஒரு கட்சியிலே இருக்கின்ற காரணத்தால் கேட்டுக் கொள்கிறேன், இந்த ஆட்சியிலே உள்ளவர்கள்—அறிவு படைத்தவர்கள்—ஆற்றல் நிரம்பியவர்கள்—ஏழை மக்களிடத்திலே அக்கறை உள்ளவர்கள் என்பதை நானும்,நான் சார்ந்திருக்கின்ற இயக்கமும், எங்களை நம்பி இருக்கின்ற பொது மக்களும் உண்மையென்று நம்ப வேண்டுமானால், ஓட்டை நிரம்பிய சட்டத்தைத் திருத்துவதற்கு உடனடியாக ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு தங்களுக்கிருக்கின்ற எல்லா அரசியல் அதிகாரத்தையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்!

அதைப் பயன்படுத்தத் தவறுவார்களானால் உண்மையிலேயே இவர்கள் சட்டம் கொண்டு வந்ததே கண் துடைப்பதற்கும், சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிக்கு ஆசை காட்டி, மிராசுதாரை அருகே கூப்பிட்டு, சட்டத்திலே இன்ன ஓட்டை இருக்கிறது; இதன் வழியாகத் தப்பித்துக் கொண்டுபோ—என்று சொல்லுவதற்கும்தானோ என்று அஞ்ச வேண்டி இருக்கிறது!

சில வீடுகளுக்குள்ளே கள்ளன் நுழைகின்ற நேரத்தில், தோட்டக்காரனை சரிப்படுத்திக் கொண்டு 'புழக்கடைக் கதவை தாழ்ப்பாள் போடாமல் விட்டு விடு' என்று சொல்லி விடுவான். அவனும் தாழ்ப்பாள் போட்டதைப்போல் பாவனை காட்டி போடாமல் விட்டு விடுவான். பிறகு கதவைத் தைரியமாகத் திறந்துகொண்டு உள்ளே நுழைவான் கள்ளன். அது போல் நீ போட்ட சட்டம் தாழ்ப்பாள் போடாத புழக்கடைக் கதவு! நீ என்று காமராசரை மரியாதைக் குறைவாகப் பேசுவதாக எண்ண வேண்டாம். அப்படி நான் பேசுகின்றபோதெல்லாம் , சர்க்காரைக் குறிப்பிடுகிறேன். அதனுடைய 'மகோன்னதப் புருஷரை' அல்ல. அவரை நான் 'அவர்' என்றுதான் சொல்லுவேன்; அவன் என்று சொல்ல மாட்டேன் மறந்தும். ஆகையினால் யாராவது ஓரத்திலே ஒதுங்கியிருக்கும் காங்கிரஸ்காரர்கள் அவசர அவசரமாகக் காமராசருக்குக் கடிதம் எழுதி, 'அண்ணாத்துரை உன்னை 'அவன் இவனெ'ன்று பேசினான்' என்று கலகம் மூட்டாதீர்கள். அவனென்று சொல்லத்தக்க அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய அகராதியை மட்டமாக்கிக்கொள்ளவில்லை.

உழைப்பின் உருவம் உருக்குலைந்து போவதா?

அவ்வளவு ஓட்டை நிறைந்த சட்டத்தைப் போட்ட சர்க்கார் அதை நீக்குவதற்கு முதல் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்! அதிலே தவறிவிட்ட பிறகு, இந்த வட்டாரத்திலே சுற்றுப்பயணம் செய்த முதன் மந்திரியும், விவசாய மந்திரியும், மராமத்து மந்திரியும், மிராசுதாரர்களை "நீங்கள் இந்தச் சட்டத்தின் சந்து பொந்து வழியாக நுழைந்து ஏழை மக்களின் வயிற்றில் அடிக்காதீர்கள்; அவர்களுக்காகத்தான் நாங்கள் இருக்கிறோம்; அவர்களால்தான் நாங்கள் கொண்டு வரப்பட்டோம்; அவர்கள் இல்லாவிட்டால் நாங்கள் இல்லை; நீங்கள்கூட இல்லை; இந்த உலகம்கூட இல்லை! அவர்கள்தான் உழைப்பிற்கு அச்சாணி!" என்று அறிவுறுத்துவார்களா? அதை விடுத்து "இவர்கள் ஏதோ போராட்டம் நடத்தப் போகிறார்களாம்! நான் ஒரு கை பார்த்து விடுகிறேன்!" என்று சொல்லுவார்களா? இதுதான் ஒரு ஆட்சிக்கு அழகா?

எங்கிருந்து கிடைத்தது அந்த பலம்?

"சட்டத்தின் துணைகொண்டு சதிபுரியாதீர்கள்! நாங்கள் ஓட்டையை நிரப்பப் போகிறோம்; இடைக் காலத்திலே நீங்கள் இடர்பாடு உண்டாக்காதீர்கள்!" என்று ஒரு வார்த்தை அவர்கள் எடுத்துச் சொல்லி இருந்தால் நங்கவரம் பண்ணை இன்றைய தினம் நெறித்தப் புருவத்துடனா பார்க்கும்? அதற்கு இன்றைய தினம் இருக்கின்ற தைரியம் என்ன? யார்பேச்சையும் கேட்கத் தேவையில்லை; அதிகாரிகளின் வேண்டுகோளுக்குச் செவிமடுக்க வேண்டாம், ஒரு இயக்கத்தினுடைய நெஞ்சும் குரலைக்கூட அலட்சியமே செய்வோம்—என்ற அளவிற்கு நங்கவரத்திற்கு நெஞ்சிலே உரம் வந்ததற்கு காரணம் என்ன? பரம்பரையாக ஏற்பட்டதா? 'அல்ல' என்கிறார்கள், அவர்களை அறிந்தவர்கள்!

அல்லது அவர்களிடத்திலே உள்ள பண பலத்தாலா? இருக்கவே இருக்காது! ஏனென்றால் பணத்திற்குள்ள பலத்தை நாடு பார்த்திருக்கிறது!

வேறு எந்த பலம்தான் இந்த படுநாசத்திற்குக் காரணம்? போராட்டம் ஒன்று ஆரம்பித்து விட்டால் நாம் ஒதுங்கிக் கொள்ளலாம்; கருணாநிதி இருக்கிறார்; காமராசர் இருக்கிறார்; அவர்களுக்குள்தானே சண்டை; நமக்கென்ன அதனாலே தொல்லை-என்ற அந்தத் தைரியம் அல்லவா நங்கவரத்தை ஆட்டிப் படைக்கின்றது!

இந்த ஆட்சியாளர்கள் உண்மையிலேயே நங்கவரத்திற்கு எவ்வளவு பலம்; விவசாயிகளுக்கு எவ்வளவு பலம்; அதை நாங்கள் ஒதுங்கி இருந்து பார்க்கிறோம் என்று சொல்லட்டும்—ஒரே ஒரு நாள்! நாங்கள் இடையிலே புகவில்லை; சட்டத்தின் பாதுகாப்பை யாருக்கும் தரவில்லை; ஒருமேட்டிலே நின்று கொண்டு பார்க்கிறோம்; ஒரு நாள்கூட வேண்டாம்; ஒரு மணி நேரம்—ஒரு மணி நேரம்கூட வேண்டாம்; ஒரு வார்த்தை சொல்லட்டும், யாருக்கு பலம் என்று கவனிப்போம் என்று! என்ன நடக்கும்? நங்கவரமல்லவா நாங்கள் இருக்கின்ற இடத்திற்கு அவசரமாக மோட்டாரில் வருவார்கள்!

காதகர்களுக்குக் கேடயமாகாதே!

ஆனால் நீ அல்லவா அவர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்றாய்! காதகர்களுக்குக் கேடயமாகிறாய்! ஏழைகளுடைய கைக்குக் கட்கமாக மறுக்கின்றாய்!

காமராசர் யாருக்கு இன்று பயன்பட விரும்புகிறார்? காதகர்களுக்குக்கேடயமாகவா? அறப்போர் வீரர்களின் கையிலே இருக்கின்ற கட்கமாகவா? இதுதான் இன்றைய பிரச்சினை! அதைத்தான் இன்று மட்டுமல்ல; இங்கு மட்டுமல்ல; இந்தியத் துணைக் கண்டம் பூராவிலும் உள்ளோர் கூர்ந்து கவனிக்கத்தக்க அளவில்—எத்தனை காலம் சென்றாலும் சுட்டிக் காட்டதக்க அளவில் நடைபெற இருக்கின்ற ஒரு மகத்தான சோதனை காலம் காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு!

அவர்கள் எங்களைப் பார்த்து "நீங்கள் எல்லாம் நாட்டைப் பிரிக்கச் சொல்லுகின்றீர்களே! நடவாததைப் பேசுகின்றீர்கள்" என்று இடித்துச் சொன்னார்கள்; இங்கிதமாகக்கூடச் சொன்னார்கள். 'ஐயனே! இது 'நாட்டுப் பிரிவினை' பிரச்சினை அல்ல. அவ்வளவு பெரிய பிரச்னையை நான் நிச்சயமாக உங்களிடம் தரமாட்டேன். இது நீங்களே தீர்த்துவைக்கக்கூடிய பிரச்சினை. ஏர் பிடிப்பவனுக்கு உழுவதற்கு நிலம் கேட்கிற நேரத்தில்—அவர்கள் வழக்கமாக உழுது வந்த நிலத்தை வழக்கமான முறையில் அவனுக்குத் தரவேண்டும் என்று கெஞ்சிக் கேட்கின்ற நேரத்தில் அவனைக் காப்பாற்றுவதற்காகவாவது உங்கள் சக்தியைப் பயன்படுத்தக்கூடாதா? அதற்குக்கூடவா இந்த ஆட்சியாளர்களுக்கு ஆற்றல் அற்றுப் போய் விட்டது? செய்ய முடியவில்லையென்றால் பகிரங்கமாக நாட்டிற்கு அறிவித்துவிடுங்கள்! நாம் [illegible]

மு. க.
எழுதும்
நீட்டோலை:
வியர்வையின் வெற்றி!
★
'முரசொலி'
அடுத்த இதழில்!

"அண்ணுதுரை மிரட்டவில்லை; சரித்திரத்தைச் சொல்லுகிருன்!"

இருப்போம்; ஓட்டை விழுந்த குடிசைகளும், குழி விழுந்த கன்னங்களும், வரண்ட தலையும், இருண்ட கண்களும் படைத்த ஏழை மக்களே! எங்களை நம்பாதீர்கள்—என்று சொல்லி விடுங்கள். எதற்காக அவர்களைப் பார்த்து "உங்களுக்குத்தான் அரசு" என்கிறீர்கள்?....அதே நேரத்தில் மிராசுதாரர்களையும் பார்த்து "எதற்கும் பயப்படாதீர்கள்" என்கிறீர்கள்?

நாளைய தினம் துவங்க இருக்கின்ற அறப்போர் அமளியிலே முடியாமல் இருக்க வேண்டுமென்பதற்காக என்னைச் சார்ந்திருக்கின்ற எல்லா நண்பர்களும் தங்களுடைய முழுத்திறனையும் உபயோகப்படுத்தி வருகிருர்கள். எந்தக் காரணத்தைக் கொண்டாவது அமளி மூண்டால், நான் பகிரங்கமாகவே குற்றம் சாட்டுவேன். அப்படி சிந்தப்பட இருக்கின்ற இரத்தத்திற்குக் காரணமான முதல் குற்றவாளி நாட்டை ஆளுகின்ற காமராசரே தவிர, வேறு எவருமில்லை!

அறப்போர் வீரர்களுக்கு வேண்டுகோள்!

எனினும், அமளி நடக்கக்கூடாது என்பதை மனதில் கொண்டு, செயலாற்ற வேண்டுமென்று விவசாய முன்னேற்ற சங்கத்தை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்!

விவசாயப் பெருங்குடி மக்களே! உங்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கரம் இன்றைய தினம் வலிவு மிக்கதாக இல்லை! அது இன்றைய தினம் பதினைந்தே பேர்களைத்தான் சட்ட சபையிலே பெற்றிருக்கிறது! எதிர்புறத்திலே வீற்றிருக்கின்ற காங்கிரஸ் கண்ணியவான்கள் நூற்றைம்பது என்ற எண்ணிக்கையிலே இருக்கின்ருர்கள்! நாங்கள் உங்கள் சார்பிலே வாதாடுகின்ருேம். நங்கவரம் பண்ணையிலே நேரிடுகின்ற பல்வேறு வேறுபாடுகளைப்பற்றி நண்பர் கருணாநிதி எடுத்துப் பேசினர். இருந்தும் என்ன பலன்? ஜனநாயகத்திலே ஒரு கணக்கிருக்கிறது. நங்கவரத்தை எதிர்த்துப் பேசியவர்கள் எத்தனை பேர்? 15 பேர்! அதற்கு எதிர்புறத்திலே உள்ளவர்கள் எத்தனை பேர்? 150 பேர்! இந்தக் கணக்கைப் பார்த்தவுடன் பதினைந்தை அலட்சியப்படுத்தி நூற்றைம்பது ஆணவமாக நடந்துகொள்கிறது! அதனுல் வந்த வினை இவ்வளவும்! பதினைந்து பேருக்குப் பதிலாக ஒரு ஐம்பது பேர், அறுபது பேர் சென்றிருந்தால் ஆட்சியாளர்கள் இப்படி ஆணவப் போக்கிலே நடந்துகொள்வார்களா?

நாட்டு மக்கள், எப்படிப்பட்டவர்கள் ஆள வருகின்ருர்கள் என்பதை முன் கூட்டித் தெரிந்துகொள்ளாமல்—பூனைக்கும் தோழன்; பாலுக்கும் காவல் என்று சொல்லுகின்ற தன்மையிலே உள்ளவர்கள் பாராள வருகின்ருர்கள் என்பதை உணர்ந்துகொள்ளாமல்—150 காங்கிரஸ்காரர்களை சட்ட மன்றத்தில் உட்கார வைத்ததின் விளைவை—வேதனையை—இடையூறை—இன்று நங்கவரத்தில் மட்டுமல்ல; நாடு முழுதும் உணருகிருர்கள்.

நேற்றைய தினம் செய்வேலிக்குப் போயிருந்தேன். அங்கே இருக்கின்ற பாட்டாளி மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக "எங்களுடைய குடிசைகளைப் பிய்க்கிருர்கள்! நிலங்களையெல்லாம் பறிமுதல் செய்கிருர்கள்! ஓட ஓட விரட்டுகிருர்கள்! ஏனென்று கேட்டால் சட்டமென்கிருர்கள்! நீதி கிடையாதா என்ருல், சட்டத்திலே பார்த்துக்கொள் என்கிருர்கள்!' என்று முறையிட்டு அழுதார்கள்.

காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டு விட்டதாலே ஆனந்தம் தாண்டவமாடுவதாகக் காமராசர் எடுத்துச் சொல்லுகிருர். இந்தப் பகுதியின் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட உழவர் குடும்பத்தின் தொழிலுக்கு ஆபத்து வருகின்ற நிலையில், அவர்கள் 'ஆண்டை' சொன்ன அத்தனைக்கும் கட்டுப்படுவதாக இறங்கி வருகிருர்கள்; 'உங்கள் விருப்பப்படி நிபந்தனை வகுத்துக் கொள்ளுங்கள்; 60-40 எங்களுக்கு இப்பொழுது வேண்டாம்; சட்டம் திருந்தி வரட்டும்—என்று கெஞ்சுகிருர்கள். ஆனுல் பண்ணையார், "நான் அந்த நிலத்தை உனக்குத் தர முடியாது; நிலத்திலே ஒரு பகுதியில் கருப்பு சாகுபடி செய்யப் போகிறேன்!' என்று சொல்ல, "ஐயா! அந்தக்கரும்பை நானே சாகுபடி செய்கிறேன்!" என்று உழவன் பதில் கூற, "நிலத்தை உன்னிடம் விடமாட்டேன்! முடிந்தால் பார்த்துக்கொள்!' என்று பண்ணையார் பண்பை உதறிவிட்டுப் பதில் சொல்லுகிருரே, இது முறையா?

ஏழைகளின் கண்ணீரா உனக்குப் பன்னீர்?

நங்கவரம் பண்ணையிலே யார் யார் இருக்கின்ருர்கள் என்பது எனக்குத் தெரியாது; ஆடவர்களும் இருப்பார்கள்; பெண்களும் இருப்பார்கள்; அவர்கள் பெற்றெடுத்த குழந்தைகளும் இருக்கலாம்; அண்ணன், தம்பி, அக்காள், தங்கைகள் இருக்கலாம்! மனித குலத்திற்கு ஏற்ற இரக்க உணர்ச்சியோடு அவர்கள் பார்க்கின்ற நேரத்தில், இரண்டாயிரம் குடும்பங்களைப் பட்டினி போட்டுக் களிக்கும், ஏ, நங்கவரம் பண்ணையே! உனக்குக் காலமெல்லாம் நல்ல பெயர் கிடைக்குமென்ரு கருதுகின்ருய்? எத்தனை பேர் உன்னுலே அழப் போகின்ருர்கள்? எத்தனைக் குடும்பங்கள் இருண்டு கிடக்கப் போகின்றன? எத்தனை பேர் ஏர் பிடித்த கரங்களால் மண்டையில் அடித்துக்கொண்டு "ஐயோ, மார்பு எலும்பு ஒடிய பாடுபட்டேன்! மாட்டைவிட வேகமாக வேலை செய்தேன்—மகானுபாவர், நிலத்தைப் பிடுங்கிக் கொண்டாரே! ஆண்டவனே, உனக்குக் கண்ணில்லையா?' என்று எத்தனை ஏழைகள் அழப்போகிருர்கள்?

அந்தக் கண்ணீரா உனக்குப் பன்னீர்? வேறு பன்னீர் உன்னுலே வாங்கிக்கொள்ள முடியாதா? ஏன் இந்த ஏழைகளின் கண்ணீரை விலை கொடுத்து வாங்க வேண்டுமென்று கருதுகிருய்?

நங்கவரம் பண்ணையிலே இளைஞர்கள் இருப்பதாக நான் கேள்விப்படுகின்றேன். இளைஞர்கள் உள்ளம் ஆதிக்க வெறியிலேமட்டும் ஈடுபடக்கூடாது; உலக வரலாற்றை அறிந்திருக்க வேண்டும் நீதி நியாயம் என்று நேற்று கருதப்பட்டவைகள் இன்றைய தினம் எப்படி அப்புறப்படுத்தப்பட்டன என்பதை அவர்கள் படித்திருப்பார்கள். பண்ணையார்களாக இருந்தாலும் படிப்பாளிகளாக இருப்பார்கள் அவர்கள் படித்ததை மறந்துவிட்டிருந்தால் இன்று இரவு அவர்கள் உலக வரலாற்றிலே எந்தப் பக்கத்தில் வேண்டுமானுலும் பார்க்கட்டும். பக்கத்திற்குப் பக்கம் நங்கவரங்கள் எத்தனையோ உலகத்தில் இருந்தன; அத்தனையும் நாசமாய்ப் போனதைத்தான் வரலாறு காட்டுகின்றதே தவிர, நீடூழி வாழ்ந்ததாகக் காணேம். நங்கவரம் பண்ணைகளைவிட பல்லாயிரக் கணக்கான அளவு பலம் படைத்த பண்ணைகளை வைத்துக்கொண்டிருந்தவர்கள் எல்லாம்கூட எங்களுடைய பண்ணைகளை எடுத்துக்கொள்ளுங்கள்; எங்களைச் சும்மா விட்டால் போதும்—என்று உலகத்திலே ஓலமிட்டார்கள்! அப்படிப்பட்ட பயங்கர நிலைமை இங்கே வருமென்று அண்ணுத்துரை மிரட்டுகிருன்; நாங்கள் அஞ்சமாட்டோம்—என்று நங்கவரம் கூறுமானுல், அண்ணுத்துரை மிரட்டவில்லை; சரித்தரத்தைச் சொல்லுகிருன்! மிரட்டுகின்ற அளவிற்கு எங்களது கழகத்திற்கு, வலிவு, பொலிவு சட்ட மன்றத்திலே ஏற்பட்டிருக்குமானுல் நங்கவரங்களே, தெரிந்து கொள்ளுங்கள்—நீங்கள் இந்த அளவிற்குக்கூடப் பேசுவதற்கு அன்றைய ஆட்சி விட்டு வைக்காது. இன்று என்ன செய்யலாம்? நாங்கள் வலுவிழந்தவர்கள். எங்களை நம்பியிருக்கின்றவர்களும் வலுவிழந்தவர்கள்—ஆகையினுல் ஒரு குருடன் மற்ருெரு குருடனை வழிபிடித்து இழுத்துக்கொண்டு போவதைப்போல் நாங்கள் இடர்ப்பட வேண்டி இருக்கிறது!

அவ்வளவே தவிர, காங்கிரசிடத்திலே கொடுத்த பலத்தில் கால் பாகம் எங்கள் கையிலே கொடுத்தால், மிட்டா மிராசுகள்—"நாங்களே பேரம் பேசி மிட்டா மிராசுகளை ஒப்புவித்துவிடுகிருேம். கொடுப்பதைக் கொடு!" என்று கேட்டு வாங்கிக்கொண்டல்லவா போவார்கள்! இன்றைய ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி இல்லையே!'

வாழ்வு தந்தவர்களை வதைப்பது நீதியா?

நங்கவரத்தை நான் மிரட்டுவதாகக் கருத வேண்டாம். அவர்களுடைய உள்ளத்திலே இருக்கின்ற மனிதாபிமான உணர்ச்சியை நான் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் அண்ணன், தம்பி—அக்காள் தங்கையோடு பிறந்தவர்கள். உங்களுடைய தங்கை தான்

திருமண அழைப்பு.

அன்புடையீர்!

நிகழும் 5—9—57-ம் தேதி வியாழக்கிழமை காலை 6—45— 7—45 மணிக்குள் எனக்கும், வஞ்சி, பொன்னுசாமி (செட்டியார்) அவர்கள் மகள் திருமதி. சகுந்தலாவுக்கும் உடுமலை வட்டம்—மிட்ராத்தியில் நடைபெறும் திருமணத்திற்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
டி. ஏ. சந்தானம்,
சிந்தனைப் பாசறை,
11-25, வெட்டர்பான் பேட்டை,
கோவை.

காலடியிலே மிதிபட்டோர் - உங்கள் கனவில் தோன்றி வதைத்திடுவர்!

பெற்றெடுத்த குழந்தையைத் தொட்டிலிலே இருந்து தூக்கி முத்தமிடுகின்ற நேரத்தில், அந்தக் குழந்தையின் கையிலே தங்க வளையல்களைப் பார்க்கின்றீர்கள்; உங்களுடைய தங்கையின் காதுகளிலே வைர ஓலையைப் பார்க்கின்றீர்கள்; அவள் உங்களுக்கு வெள்ளி டம்ளரிலே 'காபி' கொடுப்பதையும் பார்க்கிறீர்கள். இவ்வளவையும் உங்களுக்குக் கொடுத்தவன் 'வேலை இல்லை' என்று விரட்டப்படுகின்ற இந்த ஏழை விவசாயிதான் என்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

நீங்கள் பூமியைத் தோண்டும்போது பவுன் கிடைக்கவில்லை; கல்தான் கிடைத்தது. அந்தக் கல்லையெல்லாம் அப்புறப்படுத்தி—காடு கழனிகளையெல்லாம் கரம்பாக்கி—நீர்ப் பாசனம் உண்டாக்கி—நெற்றி வியர்வையையேகூட நீர்ப்பாசனமாக்கி நங்கவரம் பண்ணைகளை இன்றிருக்கும் விவசாயிகள் அல்ல; இவர்களின் மூப்பாட்டனர்கள் உண்டாக்கினார்கள்.

கற்றுத் தெரிவதா, மனிதாபிமானம்?

அதிலே வாழுகின்ற உங்களுக்கு சட்டம் தெரியவேண்டாம்; பிறகு தெரிந்துகொள்ளுங்கள்; நியாயம்கூட தெரிய வேண்டாமா? மனித உணர்ச்சி இருக்க வேண்டாமா? மனிதாபிமானத்தைக் கூடவா மனிதர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்? மிருகங்கள்கூட சில நேரங்களில் அன்பாக நடக்கின்றனவே! உள்ளத்தில் அன்பு புகுந்திருப்பது ஒன்றுதானே மனிதனுக்கும் மிருகத்திற்கும் இருக்கின்ற பேதமென்று எல்லா அறநூல்களும் சொல்லுகின்றன! அந்த மனித உணர்ச்சி கூடவா நங்கவரம் பண்ணைக்கு இருக்கக்கூடாதென நான் பண்ணையிலே உள்ளவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

துயர்படுவோர் உங்கள் உறக்கத்தைக் கெடுப்பர்!

நீங்கள் ஏழை விவசாயிகளை அல்லல்படுத்துவதனால் ஆனந்தத்தை அனுபவிக்கலாம். நாளைய தினத்திலிருந்து போலீஸ்காரர்கள் விவசாயிகளை மிரட்டி—அல்லது அடித்து—அவர்களில் சில பேருக்குக் கை ஒடிய—கால் ஒடிய—சில பேருக்குக் கண் போய் இரத்தம் சொட்ட—அவனைக் கல்யாணம் செய்து கொண்ட மனைவி 'ஐயோ' என ஓலமிட்டு அழுத—தெருமண்ணை எடுத்துத் தூற்றி—எந்தப் பாவியால் இந்தக் கதி நேரிட்டதோ' என்று புலம்புகிற காட்சியை, நங்கவரம் பண்ணைகளே, நீங்கள் நேரிடையாகப் பார்க்காவிட்டாலும் உங்கள் கனவிலே வந்து மிரட்டும்! எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அந்த பயங்கரமான கனவு உங்கள் பெட்டியிலே லட்ச லட்சமாகப் பணமிருந்தாலும், நீங்கள் தங்க, வைர நகைகளைப் பூட்டிக்கொண்டிருந்தாலும், உங்களைத் தூங்கவிடாது! நீங்கள் கண்ணை மூடினால் ஏழை விவசாயிதான் எதிரிலே தெரிவான்! நீங்கள் கண்ணைத் திறந்தால் அவனுடைய ஓலம்தான் உங்கள் காதில் விழும்!

"ஏழேழு தலைமுறைக்கும் சும்மா விடாது!"

உங்களிடத்திலே ஆயிரக் கணக்கான ஏக்கரா பூமி இருக்கலாம். அதிலே நீங்கள் கரும்பு பயிரிட வேண்டுமென்று திட்டமிட்டிருக்கலாம்; அந்தக் கரும்பிலே கிடைக்கக்கூடிய லாபத்தைக்கூட கணக்கு பார்க்கலாம்; ஆனால் இரண்டாயிரம் குடும்பங்கள் 'கோ'வென்று கதறுவதை திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாடு பூராவிலும் எடுத்துச் சொல்லப் போகிறது. நாளைய தினம் முதற்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கின்ற வேலை—தூத்துக்குடி துறைமுகப் பட்டிணத்தில் இருந்து சென்னை கடற்கரைப் பட்டிணம் வரையில் இடையில் இருக்கின்ற சிற்றூர்கள் ஊருக எல்லாவற்றிலும் "நாட்டினரே! நாட்டினரே! நங்கவரம் என்றொரு பண்ணை இருக்கின்றது. அதிலே ஆறாயிரம் ஏக்கர் நிலம் இருக்கின்றது. அங்கே பரம்பரை பரம்பரையாக நம்முடைய மக்கள் உழுது வந்தார்கள். அவர்களுக்கு உழுவதற்கு நிலம் தரமாட்டேனென்று பண்ணையார் பிடிவாதம் செய்கிறார். இப்போது! கெஞ்சிப் பார்த்தார்கள்; கேட்டுப் பார்த்தார்கள்; மறுத்து விட்டார்கள்; கடைசியிலே அறப்போரிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் அடித்து விரட்டப்படுகிறார்கள்! நங்கவரம் பண்ணையார் ஊஞ்சலிலே ஆடிக்கொண்டு துளிர் வெற்றிலையில் கலர் சுண்ணாம்புத் தடவி, அதை வாயிலே போட்டுக் கொண்டு சுப்புலட்சுமியின் கானம் ரேடியோவில் கேட்கின்ற நேரத்தில், தன்னுடைய தங்கையைப் பார்த்து 'இதுபோல உன்னாலே பாட முடியுமா?' என்று கேட்கிறார். 'போ அண்ணா! இதைவிட நன்றாக நான் பாடுவேன்!' என்று தங்கை சொல்லுகிறார். இந்தக் காட்சிதான் நாட்டிலே நடைபெறுகிறது! அடுக்குமா இது?" என்று சொன்னால் நங்கவரத்திலே உள்ளவர்களே, நீங்கள் நிச்சயமாக எழுதி வைத்துக் கொள்ளுங்கள்—போலீஸ் உங்களுக்குப் பாதுகாப்பு தரும்; நம்முடைய மாகாணத்து போலீஸ் திறமை மிகுந்தது; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் நாட்டு மக்கள் உள்ளத்திலே ஏற்படுகின்ற, மனக் கொதிப்பு—அதிருப்தி—அருவருப்பு—அவர்கள் அத்தனை பேரும் உங்களைத் தூற்றுகின்ற தூற்றல்—நான் 'வைதீகபாஷை'யில் சொல்ல வேண்டுமானால் ஏழேழு தலைமுறைக்கும் விடாது! அதைத் தயவு செய்து மனதிலே பதிய வைத்துக் கொள்ளுங்கள்!

அதிகாரிகளும் நாமும் பகைவர்களோ அல்ல!

இவைகள் அத்தனையும் செவிடன் காதிலே ஊதிய சங்காகி, நாளை அறப் போர் துவங்கும் என்ற நிலை ஏற்பட்டு விட்டால், விவசாயப் பெருங்குடி மக்கள் முக்கியமாக கவனத்திலிருத்திக் கொள்ள வேண்டியவை சில உள்ளன. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மற்ற எந்த இடத்திலும் இல்லாத அளவில் இந்த வட்டத்தில் அதிகாரிகள் தங்களுடைய முழு அன்பையும், முழு அக்கறையையும், முழு ஆற்றலையும் காட்டி இருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் என்னுடைய மனமார்ந்த நன்றியறிதலை இன்றைய தினம் கூறிக் கொள்ள விரும்புகிறேன். 'இன்றைய தினம்' என்று கூறுவதற்குக் காரணம்; நாளையோ, அதற்குப் பிறகோ நாங்கள் நன்றியறிதலைக் கூறிக்கொள்ளத்தக்க அளவிற்கு அவர்களும் நடந்து கொள்ள மாட்டார்கள்! அவர்களை அந்த நிலைமையில் இருக்கும்படி காமராசர் சர்க்கார் விடாது! அவர்கள் பாவம், என்ன செய்வார்கள்? 'கருணாநிதியைப் பிடி' என்றால் பிடித்தாக வேண்டும்! 'அண்ணாத்துரை தூண்டினான்' என்று வழக்கு போட வேண்டுமென்று சொன்னால் போட்டாக வேண்டும்! 'இவனை அடித்து விரட்டு!' என்றால் விரட்டியாக வேண்டும்!

அதற்குப் பிறகு வீட்டிற்குப் போனவுடன் அவர்களும் வியர்வையைத் துடைத்துக் கொள்ளும்போது, மனைவி "என்ன இவ்வளவு அலுப்பு?" என்று கேட்க, "என்னம்மா செய்வது? ஏதோ வயிற்றுப் பசிக்காக வேலையில் இருக்கிறேன்! அவன் கொடுக்கின்ற காசிற்காக கைகூட வலிக்கிறது—ஏழைதான்; அவனை ஓட ஓடத்தான் அடித்தேன். 'ஐயா' என்றான்; மனமே இறங்கிவிட்டது. இருந்தாலும் என்ன செய்வது?" என்று பேசுவார்கள்.

அவர்களுக்கும் நமக்கும் இம்மி அளவு தகராறு இல்லை. அவர்கள் விவசாய மக்களுடைய குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு எவ்வகையான முயற்சிகளும் கடைசி நிமிஷம்வரை எடுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். அவர்கள் எல்லை ஒரு குறிப்பிட்ட அளவோடு முடிந்தது. அதற்குமேல் அவர்களால் போக முடியாது. எல்லை தாண்டிப் போவதற்கு அதிகாரம் படைத்த காமராசரே போகவில்லையென்றால் அதிகாரிகள் எப்படிப் போக முடியும்? ஆகையினாலே நீங்கள் போராட்டத்திலே நாளைய தினம் இறங்கத்தான் வேண்டுமென்ற நிலை இருக்குமானால் அதிகாரிகளுக்கும் நமக்கும் பகை, என நீங்கள் மறந்தும் எண்ணக் கூடாது.

வெற்றிக்கு வழி!

விவசாயப் பெரு மக்கள் இந்தப் போராட்டத்திலே

தமிழர்-அன்றும் இன்றும்

விலை ரூ. 0-4-0 (25 பைசா)

ஆசிரியர்: புலிக்கொடியான் (சிங்கப்பூர்)

தமிழரின் முன்னாட் பெருமையையும் இந்நாளில் உள்ள நிலைமையையும் ஆசிரியர் தெளிவாக விளக்கியுள்ளார். பல புள்ளி விபரங்களுடன் கூடிய சிறு நூல். தனிப் பிரதி வேண்டுவோர் 31 பைசாவுக்கு தபால் தலை அனுப்ப வேண்டுகிறோம். வியாபாரிகளுக்கு 25 சதவீதம் கழிவு உண்டு.

மற்ற தமிழ் நூல்கள் அனைத்தும் எங்களிடம் எப்பொழுதும் கிடைக்கும். விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

ராஜேஸ்வரி புத்தக நிலையம், மைலாப்பூர், சென்னை—4.

சிங்கப்பூரில் கிடைக்குமிடம்:
எம். என். இருளப்பன், ராயல் தியேட்டர் புக் ஸ்டால், 635-ஏ, நார்த் பிரிட்ஜ் ரோடு, சிங்கப்பூர்-7.

'பச்சை வெட்'டால் பாழ்செய்தவர் 'பச்சைத் தமிழர்'தான்!

வெற்றி பெறுவதற்கு ஏதாவது ஒரு வழி காட்ட வேண்டும் என்று என்னைக் கேட்டால், நீங்கள் எவ்வளவுக் கெவ்வளவு கண்ணியத்தைக் காட்டுகிறீர்களோ—கட்டுப்பாடுடன் நடந்து கொள்ளுகிறீர்களோ—உங்களுடைய மனக் கசப்பைக் காட்டாமல் கண்ணீரையே காட்டுகிறீர்களோ—அவ்வளவு துரிதமாக வெற்றி கிடைக்கும்! பலாத்கார வாடை வீசுகின்ற தன்மையில் நடந்து கொள்வீர்களானால் நிச்சயமாகப் போராட்டமும் வெற்றி பெறாது! கழகத்திற்கும் இழுக்கு உண்டாகும்! நாட்டிற்கும் அதனால் பயனுண்டாகாது!

எய்தவர் அருகிருக்க அம்பை நோகாதீர்!

நான் சொன்ன உபமானத்தை எப்போதும் மனதிலே வைத்துக் கொள்ளுங்கள். நமக்கு ஏற்பட்டிருக்கின்ற இடர்பாட்டிற்குக் காரணம் நாம் உண்ட மருந்து! அந்த மருந்து பச்சை வெட்டாக இருந்ததால் கைகால் இழுத்துக்கொண்டதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அம் மருந்தைத் தயாரித்தவர் காமராசர்; நங்கவரம் பண்ணை அல்ல; நாட்டிலே இன்றைய தினம் அமுல் நடத்துகின்ற அதிகாரிகள் அல்ல! ஆகையினாலே எய்தவன் இருக்க அம்பினிடத்திலே நொந்து கொள்ளக்கூடாது!

தமிழ் நாடு, நீங்கள் எந்த அளவிற்கு வதைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை ஓரளவிற்கு அறிந்திருக்கிறது. மேலும் நாங்கள் அறியச் செய்வோம். திராவிட முன்னேற்றக் கழகம் நாடு முழுவதும் அதற்கான பிரச்சாரத்தைத் தொடங்கும். நீங்கள் எவ்வளவோ பணிந்து போக விரும்பினீர்கள். பணிந்து போனாலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் உங்களை அதற்கு இணங்கவைக்காமல் தடுத்து விட்டார்கள் என்பதை நாடறிய எடுத்துச் சொல்லுவோம். நாட்டு மக்களுடைய நல்லெண்ணம் உங்கள் பக்கம் திரண்டு இருக்கும்படியாகச் செய்கின்ற முழுப் பொறுப்பும் எங்களைச் சேர்ந்தது!

அந்தப் பொறுப்பை நாங்கள் நிறைவேற்ற வேண்டுமானால், அறப்போரிலே ஈடுபடுகின்ற விவசாயப் பெருங்குடி மக்கள்—அதை நடத்துகின்ற விவசாய முன்னேற்ற சங்கத்தார் ஒரு துளியும் கண்ணியம் கெடாத முறையிலே நடந்து கொள்ள வேண்டும்! அந்த உறுதியை விவசாய முன்னேற்ற சங்கத்துப் பொறுப்புள்ள நண்பர்கள் என்னிடத்திலே சொல்லிய நேரத்தில் மகிழ்ச்சி அடைந்தேன்; பெருமைப்பட்டேன்!

'இன்று ஒரு போராட்டம் நடத்தினோம்; நாளைய தினம் என்ன பலன்?' என்று கணக்குப் பார்த்தால் போராட்டம் எந்தக் காலத்திலும் வெற்றி பெறாது!

கிளர்ச்சியின் இலக்கணம்!

மனிதன் ஒரே ஒரு தடவைதான் சாவான்; இரண்டு மூன்று தடவை சாவதில்லை. அந்த ஒரு தடவையும் பாம்பு கடித்த இறக்கலாம்—நடந்து போய்க்கொண்டிருக்கும் பொழுதே மார்பு வெடித்து இறக்கலாம்—நாலு மாதம், ஆறு மாதம் ஈளை கட்டி, இருமி இறக்கலாம்—அல்லது வேறு விதமான 'துர்பாக்கிய' நிலைமைகளுக்கு ஆட்பட்டு இறக்கலாம்—எப்படி இறப்பதானாலும் ஒரு தடவைதான் இறக்கிறான்! கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறவர்கள், பயங்கரமான அடக்குமுறைகள் வீசப்பட்டால் என்ன செய்வதென்ற எண்ணம் வருகின்ற நேரத்தில், 'மனிதனுக்கு சாவு ஒரு தடவைதான்' என்ற அந்த உத்தமமான வாசகத்தை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். நான் செத்து விட்டால் கிளர்ச்சியால் என்ன பலன் என்று எண்ணுவதிலே பலன் இல்லை. கிளர்ச்சி நடத்துவதெல்லாம் நமக்குமட்டுமல்ல; நம்முடைய பின் சந்ததிக்கும் சேர்த்துத்தான் என்ற புனிதமான எண்ணம் கிளர்ச்சிக்காரர்கள் உள்ளத்தில் எப்பொழுதும் இருக்க வேண்டும்!

இது குளித்தலை விவசாயிகளுக்குமட்டுமல்ல; தமிழ் நாட்டிலுள்ள அத்தனைபேருக்கும் நான் சொல்லுகிறேன், கிளர்ச்சிகளின் இலக்கணமே அதுதான்!

மக்கள் குரலே மகேசன் குரல்!

அந்த முறையில் கிளர்ச்சியில் ஈடுபடுகின்ற தோழர்களைப் பொது மக்கள் பூரணமாக ஆதரிக்க வேண்டும். அதனால்தான் என்னுடைய வேண்டுகோள் பொது மக்களுக்கும் சேர்ந்தது என்று முதலிலேயே கேட்டுக்கொண்டேன். நீங்கள் நியாயத்தை எடுத்துச் சொன்னதைக் கேட்டீர்கள். நங்கவரம் பண்ணை தன்னுடைய கட்சியை எடுத்துச்சொல்லவில்லை. சொல்லாததற்குக் காரணம், 'நீங்கள் யார்? உங்களிடத்தில் என்ன சொல்லுவது?' என்று கருதுகிறார்கள். நாங்கள் அப்படியல்ல; உண்மையான நியாயத்தை வழங்கக்கூடியவர்கள் நிரந்தரமான நீதிபதிகள்—நல்ல தீர்ப்பு அளிக்கக்கூடியவர்கள்—எந்த நல்ல ஆட்சியையும் உருவாக்கக் கூடியவர்கள்—உருவான ஆட்சி உருக்குலைந்து போனால், ஆட்சியை மாற்றி அமைக்கக் கூடியவர்கள் பொது மக்கள்தான் என்று கருதுகிறோம். ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு; லத்தீனிலே ஒரு பழமொழி உண்டு; தமிழிலே 'மக்கள் குரல்தான் மகேசன் குரல்' என்று சொல்லுவார்கள். ஆகையினால் மக்களாகிய உங்களைப் பார்த்து நான் கேட்டுக் கொள்ளும் நேரத்தில், 'மகேசனை'யே பார்த்துக் கேட்டுக் கொள்வதாகக் கருதுகிறேன்.

இணைப்புச் சங்கிலியாவீர்!

இந்தப் பிரச்சினையில் நீதி இருக்கின்றதென்று உங்களுக்குப்பட்டால்—விவசாயிகள் சங்கம் நேர்மையுடன்தான் நடக்கிறது என்று நீங்கள் கருதினால்— அவர்களுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்! பொதுமக்களுடைய ஆதரவு இல்லாமல் நடத்துகின்ற கிளர்ச்சி நிச்சயம் வெற்றி பெறாது! திராவிட முன்னேற்றக் கழகங்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நாடு இந்தப் பிரச்சினையில் இருக்கின்ற சகல தொல்லைகளையும் நாடு அறிய எடுத்துச் சொல்லவேண்டும். நாட்டு மக்களுக்கும் விவசாய சங்கத்திற்கும் இணைப்புச் சங்கிலியாக இருந்து பணியாற்ற வேண்டும்.

கலப்புத் திருமணம்

16—9—57 அன்று காலை 10 மணி அளவில், மதுராந்தகம் திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில், தோழர் ஜி. எஸ். நாராயணன்—தோழியர் லீலாவதி—இருவரின் கலப்புத் திருமணம் தோழர் பி. சிவானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அன்பர்கள் வந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
சி. ஆர். பாலு

அலைந்து திரிந்து அறப்போர் தேடோம்!

திராவிட முன்னேற்றக் கழகம் வேண்டுமென்றே கிளர்ச்சிகளுக்காக அலைந்து திரிகின்ற அற்பக் கட்சி அல்ல! கிளர்ச்சியிலே மக்களை ஈடுபடுத்தி விட்டால் ஏற்படும் சாதக பாதகங்களை நாங்கள் மனமார அறிந்திருக்கிறோம்! ஏழை கண்ணீர் விட்டால், எத்தனை ஏழை கண்ணீர் விட்டான் என்று கணக்கெடுத்து லாபத்தைத் தேடுகின்ற ஒரு காதக இயக்கமுமல்ல!

கிளர்ச்சிகளுக்காக நாங்கள் அலைந்து திரிவதென்றால், நாளைக்கொரு கிளர்ச்சி நடத்தலாம், வேளைக்கொரு விதத்திலே போராடலாம். ஆனால் நான் அன்றும் சொன்னேன்; இன்றும் சொல்லுகிறேன்; என்றும் அக்கருத்து என் மனதிலே இருந்துதான் தீரும்; கிளர்ச்சிகளுக்காக ஒரு கட்சி அலைந்து திரிதல் கூடாது! ஆனால் ஒரு கிளர்ச்சி நாட்டிலே உருவானால் அதைக் கழகம் ஓடி ஒளியக் கூடாது!

இப்பொழுது எங்கே கிளர்ச்சி நடக்கிறது? நங்கவரத்திலா, தங்கவரத்திலா—என்று நாம் தேடிக் கொண்டில்லை. கிளர்ச்சி வடிவெடுத்து விட்டது! விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வளவு தூரம் பணிந்து போக முடியுமோ அவ்வளவு தூரம் பணிந்துபோய்ப் பார்த்

✻ 4-ம் பக்கம் பார்க்க

கே. ஏ. அருணாசலம்

அருமைத் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களின் மூத்த சகோதரர் திரு. கே. ஏ. அருணாசலம் அவர்கள் கடந்த 19—8—57 அன்று தம் சொந்த ஊரான கணியூரில் இயற்கை யெய்தினார் என்ற துயரச் செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அண்ணனைப் பிரிந்து ஆற்றொணாத் துயரத்திலாழ்ந்திருக்கும் நண்பர்கள் மதியழகன் அவர்கட்கும், அவரது மற்றொரு சகோதரர் கே. ஏ. முருகேசன் அவர்கட்கும், மற்றும் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ—ர்)

உழுதுண்டு வாழ்வாரே!

சென்ற வாரத் தொடர்ச்சி.

கொடி பிடித்து—உரிமைக் குரல் எழுப்பி—'வாழ்வுக்கு வழி தா; அல்லது பழி தீர்த்துக்கொள் எங்களை!' என இரண்டிலொன்று முடிவு தேடிப் புறப்பட்ட அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் படை, பண்ணையாருக்குச் சொந்தமான நிலம் நோக்கி வேக நடை போட்டுக்கொண்டிருந்தது.

நிலம் நெருங்க நெருங்க அவர்களின் நடையிலே புது மிடுக்கு தோன்றியது. வரப்புகளிலே அணி வகுத்து கண்ணியம் கெடாமல் அவர்கள் நடந்து சென்ற காட்சி அழகாகத்தான் இருந்தது. அந்த அழகை நாம் ரசிக்கலாம்; கூடி நின்று ஊக்கமளித்த ஆயிரக் கணக்கான பொது மக்கள் ரசிக்கலாம்; ஆனால்...பண்ணையார்...?

நிலத்தின் மற்றொரு கோடியிலே கோபம் பொறி பறக்கும் கொடிய கண்களுடன் நின்று கொண்டிருந்தார் அவர். அவரைச் சுற்றிலும் நிலமெங்கும் சிதறிக் கிடந்தார்கள், நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்கள்! கூலிக்கு ஊர்விட்டு ஊர் ஓடி வந்த கருங்காலிகள்—துரோகத்தின் சாயலை முகத்திலே தேக்கி 'கூலிக்கு நாங்கள் எதையுமே செய்வோம்; உங்களத்தனைபேரையும் கூண்டோடு மரண வாசலுக்குக்கூட அனுப்பி விடுவோம்!' என்ற பாவனையில் நின்று கொண்டிருந்தார்கள்.

ஆனால் விவசாயிகள் பயந்தார்களில்லை! ஏன்; மழலைகூட மாறாத நமது சிங்கத்தம்பி காளிமுத்துவே தலைவர்போல் முன் செல்லுகிறானென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்: அவன் பயப்படவில்லை; உயிர் போய்விடுமே என்ற நிலை வந்தால்கூட அவன் அஞ்ச மாட்டான். முதல் நாள் இரவு, ஆயிரக் கணக்கான மக்களுக்கு, பொது மேடை அமைத்து, புத்திமதிகள் சொன்னாரே தன்னலம் கருதாத தென்னகத்துத் தலைவர், அந்தப் பொன் மொழிகளை—போருக்குச் செல்வோரை ஊக்குவிக்கும் இலட்சிய வரிகளை அவன் மறக்கவில்லை! இதோ, இப்போதுகூட அவன் செவிகளில் ஒலிக்கின்றதே:

"சாவு மனிதனுக்கு ஒரே ஒரு முறைதான் வரும்! அதுவும் மார்பு வெடித்து இறக்கலாம்; பாதை வழி நடக்கையில் பாம்பு கடித்து இறக்கலாம்; நாலு மாதம்; ஆறு மாதம் ஈளைகட்டி, இருமி இறக்கலாம்!...ஆனால் அந்தச் சாவு ஏதோ நல்ல இலட்சியத்திற்காக ஏற்படுவதென்றால், சாகும் நேரத்திலும் மகிழ்ச்சியால் பூரித்துப் போகலாம்... ஆகவே, போராடப் போகின்ற வீரர்களே! மறந்து விடாதீர்கள்! அடக்கு முறைகள் உங்களை நோக்கிப் பாயலாம்; துப்பாக்கிக் குண்டுகள் உங்களை நோக்கிப் பறக்கலாம்; ஆகவே அந்த நேரத்தில் மட்டுமல்ல; எந்த நேரத்திலும் மறந்து விடாதீர்கள், 'மனிதனுக்குச் சாவு ஒரே ஒரு தடவைதான்' வருகிறது!"

—அந்த உத்தம வாசகங்கள் இப்போதுகூட அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. அந்த இலட்சிய 'மந்திரம்'தான் எண்ணற்ற 'சிவப்புத் தொப்பி'களைக் கண்ட பிறகும், கொலைக்கும் அஞ்சா கொடியவர்களைக் கண்ட பிறகும், அவர்களிடம் பயத்தை நெருங்கவே விடவில்லை!

நடந்து சென்ற அறப்போர் வீரர்கள் நிலத்தின் வரப்பிலே நின்றனர். நீர் பாய்ந்து நின்ற நிலத்தை நோக்கினர். 'எங்கள் கால்பட்டு காலமெல்லாம் பண்ணையாருக்குப் பலன் குவித்த ஏ, நிலமே! உன்னிடமிருந்து நாங்கள் விரட்டப்பட்டோம், நாய்போல! இன்று உயிருக்கும் துணிந்து உன்னிடம் வந்திருக்கிறோம்!' என்று சொல்லாமற் சொல்லியது அவர்களின் கண்களிலே துளிர்த்து நின்ற கண்ணீர்!

அவர்கள் சிறிது நேரம் அப்படியே நின்றார்கள்!

"நிலத்தில் கால் வைத்தால் பிணமாக்குவேன்!" என்று கர்ஜித்த பண்ணையார் எதிர்ப் புறத்தில்!



சட்டத்தையும், துப்பாக்கியையும் கையிலேந்தி காத்து நிற்கும் போலீசார் அவர் பக்கத்தில்!

"எது வரினும் அஞ்சோம்!" என்று வயலில் குதிக்கத் துணிந்து விட்ட உழவர்கள் மறு திசையில்!

'என்ன நடக்கப் போகிறதோ; ஏது விளையப் போகிறதோ'-என்று துடிக்கும் நெஞ்சத்துடன் ஆயிரமாயிரம் பொது மக்கள் திசை எங்கும்!

கண நேரம்...ஒரே நிசப்தம்!

தலைவர் ஆணை பிறந்தது!

ஏர் கலப்பைக் கையிலேந்தி நிலத்திலே இறங்கி விட்டார்கள், விவசாயத்தையே நம்பி—இன்று விழியிலே நீர் பெருக சித்திரவதைச் செய்யப்பட்ட பாட்டாளிப் பெரு மக்கள்!

பண்ணையாரின் உள்ளம் கொதித்தது; உடல் துடித்தது; ஆனால் அவர் சிலைபோல் நின்றார். அவரது அதிகாரத்தையும், ஆணவத்தையும், 'விட்டேனா பார்!' என்ற வீராப்பையும் கட்டிப் போட்ட சக்தி எது?

போலீசா?...இல்லை!

பெருங் குணமா? பண்பட்ட தன்மையா? இல்லவே இல்லை!

பின்...?

முன்னாள் இரவு அவர் மறைந்திருந்து கேட்டாரே, நாட்டுத் தலைவரின் நல்லுரைகளை—அந்தக் 'கடைசி வேண்டுகோள்' தான் அவரது நெஞ்சத்திலே பீதியைக் கிளப்பிவிட்டு விட்டது:

"ஏழைகளின் கண்ணீரைப் பன்னீராகக் கருதும் பண்ணையாரே!... உங்கள் விபரீதப் போக்கு கண்டு இயக்கங்கள் உங்களைச் சும்மா விட்டு விடலாம்; போலீஸ் உங்களுக்குப் பாதுகாப்பு தரலாம்; ஆனால் நாட்டு மக்களின் உள்ளத்திலே ஏற்படுகின்ற அதிருப்தி—அருவருப்பு—தவிப்பு—அத்தனை பேரும், 'ஐயோ, பாவிகளே! அடுக்குமா இந்த அநீதி!' என்று வயிறு கொதித்து தூற்றுகின்ற தூற்றல்—நான் 'வைதீக பாஷை'யிலே சொல்லுகிறேன்—'ஏழேழு தலைமுறைக்கும் உங்களைச் சும்மா விட்டு விடாது!' நினைவிருக்கட்டும்; மறந்துவிடாதீர்கள்!

"ஏழேழு தலைமுறைக்கும் சும்மா விட்டுவிடாது!"—தெய்வீகத்திலே நம்பிக்கை கொண்ட பண்ணையாரை இந்தச் சொற்கள் 'சுருக்'கென்று தைத்தன!

"ஏழைகளின் கண்ணீர் வெள்ளத்திலே நீச்சல் போடும் உங்களைக் காலம் சும்மா விட்டு வைக்காது!"—அடுத்து வந்த வார்த்தைகள் அம்பைப்போல் அவர் நெஞ்சில் பாய்ந்தன.

ஆயிலும் என்ன? அதற்காக பணிந்து கொடுக்கும் பயந்த சுபாவம் கொண்டவன் என்று மற்றோருக்குத் தன் உருவத்தைக் காட்டுவது?

கொதிக்கும் நெஞ்சோடு பண்ணையார் நிற்க, பாட்டாளிகள் ஆனந்தக் கண்ணீர் சிந்திக் கொண்டு வயலிலே உழுதுகொண்டிருந்தார்கள்.

அன்று மட்டுமல்ல; அன்றைய தினத்தைத் தொடர்ந்து தினமும் நூற்றுக் கணக்கான விவசாயப் பெருங்குடி மக்கள் காய்ந்துகிடந்த நிலத்தைப் பொன் விளையும் பூமியாக மாற்றிக்கொண்டிருந்தார்கள்!

★

நிலம் உழுது—நீர்பாய்ச்சி—முளை பிடுங்கி—நாற்று நட்டு—கதிர் துளிர்த்து—காய்ந்து முற்றி—நெற்கதிர்கள் பொன் மணிபோல் மின்னும் காலம் நெருங்கி வந்து கொண்டிருந்தது; உழைப்பால்—இரத்தத்தையும் வியர்வையையும் ஒன்றாக்கி பட்டபாட்டினால்!

அத்தனையையும் கவனித்துக் கொண்டுதான் வந்தார் பண்ணையார். அவர் நெஞ்சிலே புகைந்து கொண்டிருந்த பகை கொஞ்சம் கொஞ்சமாக பயங்கர உருவம் எடுத்துக்கொண்டு வந்தது!

'எல்லாமே ஆயிற்று! அதோ உழைப்பின் பலன் கதிர்களாகத் தலைசாய்த்து நிற்கிறது! இனி என்ன? அறுவடை செய்யட்டும்; சட்டப்படிப் பங்கிட்டு அளந்து கொள்ளட்டுமே! பண்ணைக்கு சேருவது சேரட்டும்; பாட்டாளிகளுக்குஉரியது கிடைக்கட்டும்! ஏன் வம்பு?' என்ற பெருந்தன்மை பண்ணையாரிடத்திலே அப்போதும் தோன்றவில்லை! 'வாழ விடுவதா அவர்களை!' என்ற வஞ்சக நெஞ்சத்தோடுதான் உலவினார்.

கதிர் கண்டு களிப்பால் விரிந்திருந்த அவர்களது கண்களிலே கூறிய வேல் பாய்ச்ச, சதித் திட்டம் ஒன்றைஉருவாக்கிக்கொண்டு வந்தார் அந்த அக்கிரமக்காரர்!

என் தடையை மீறி—வெற்றிப் பண்பாடி—நிலத்திலே இறங்கி உழுதுப் பயிரிட்டார்களே அவர்கள், எதற்காக? இந்த நெல்லிற்காகத்தானே!

✻ 12-ம் பக்கம் பார்க்க

தம்பான்; நங்கவரம்

(?) ஒட்டை விழுந்திருக்கிற சட்டத்தைத் தற்காலிகமாக அனுஷ்டிக்கும்படிக் கூறும் அமைச்சர்களை என்னவென்று சொல்வது?

ஓட்டை விழுந்த படகில் தற்காலிகமாகப் பிரயாணம் நடத்தச் சொல்லும் 'அறிவாளி'களென்றுதான் கூறவேண்டும்!

(?) உயர்நீதி மன்றத்தில்தான் வழக்கு ஒன்று இருக்கிறதே; அதற்குள் ஏன் அவசரப்பட்டு விவசாயிகள் முன்னேற்ற சங்கம் போராட்டம் தொடுத்திருக்கிறது?

உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்து வழக்கு இருப்பது உண்மைதான். ஆனால் அந்த 'அய்யர்' வரும்வரை 'அமாவாசை'யைக் காத்திருக்கச் சொல்வது அறிவுடமையாகுமா? அமாவாசை யாவது காத்திருக்கும்; ஏழை விவசாயிகளது ஒட்டிய வயிறுகள் எத்தனை நாட்கள் பொறுத்திருக்கும்? அதனால் தான் அந்த இடைக் காலத்திற்குள் ஒரு நிவாரணம் தேவை என்றுதானே விவசாயிகள் கோருகிறார்கள்!

கிருஷ்ணகாந்தன்; சோழவந்தான்

(?) நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று கூறுபவருக்கு 'அறிஞர்' என்று பெயர் வைப்பது குருடனுக்குச் செந்தாமரைக் கண்ணன்-எனப் பெயர் வைப்பது போலாகும் என்று சுப்ரமணியம் தேனீயில் பேசியிருக்கிறாரே; அது பற்றி உங்கள் கருத்தென்ன?

உண்மைதான்; நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று கூறிய ஜின்னா ஒரு அறிவிலியானால்; அப்படிப் பிரிவது நியாயம்தான் என்று கூறிய ஆச்சாரியார் ஒரு அறிவிலியானால் நாமும் அந்தப் பட்டியலில் இடம் பெறுவதற்குத் தவறென்ன இருக்க முடியும், தோழரே!

இருதயராஜ்; பல்லாவரம்

(?) பதவியிலிருக்கும் காங்கிரசைக் காந்த ஊசிக்கு ஒப்பிடலாம் என்கிறார் என் நண்பர்— நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

அது உண்மைதான்; பத்தரை மாற்றுத் தங்கங்களைத் தொடாமல், துருப்பிடித்த இரும்புத் துண்டுகளை இழுக்கும் சக்தி காந்த ஊசிக்குத் தானே உண்டு!

தமிழ்ப்பித்தன்; சூளை

(?) தற்கொலை செய்து கொள்ள தற்போது சிறந்த வழி என்ன?

ஏன்; அகில இந்திய ரேடியோவில் 'தமிழ்' பேசப்படுகிறதே; நீங்கள் கேட்டதில்லையா!

முகவரி மாற்றம்

ஜி. பராங்குசம்

எப். 73-2

பொன்மலை

வடார்க்காடு மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு !

★

வடார்க்காடு மாவட்ட தி.மு. கழக மாநாடு முடியும்வரை தி. மு. கழக அலுவலகம் திருவண்ணாமலையில் பணியாற்றும். கழகத் தோழர்கள் திருவண்ணாமலை முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

ஆங்காங்கே, புதியதாகக் துவக்கப் பட்டுள்ள கிளைக் கழகங்களை உடனடியாக மாவட்டக் கழகத்துடன் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். மாவட்டக் கழகத்துடன் பதிவு செய்து கொண்ட கிளைக் கழகங்கள் மட்டும்தான் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்ப உரிமை பெற்றவர்களாவார்கள்.

வரவேற்புக் குழு உறுப்பினர்கள் தயைசெய்து உடனடியாக வரவேற்புக் குழு உறுப்பினர்களுக்கு உரிய கட்டணமாகிய ரூபாய் ஐந்தையும் உடன் அனுப்பி வைக்கவேண்டுகிறேன்.

மாநாட்டிற்குக் கிளைக் கழகச் சார்பில் இரண்டு பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து உடனடியாக தெரிவியுங்கள். தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள், பிரதிநிதிக் கட்டணமாகிய ரூபாய் மூன்றையும் உடன் அனுப்பி வைக்கவும்.

கிளைக் கழகப் பெயர் குறித்த கொடியொன்றையும் அனுப்பி வைக்கவும்.

தொண்டர் படையில் பணியாற்ற விரும்புவோர், கிளைக்கழகச் செயலாளர் கையெழுத்துடன் விண்ணபிக்கவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:—

முல்லை சத்தி
மேற்பார்வை
ப. உ. சண்முகம் எம். எல். ஏ.
திருவண்ணாமலை.

—முல்லை சத்தி
(வ. கு. தலைவர்)

பிறைவானம்

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

"பலன் அடையக் காத்து நிற்கும் அந்தப் பாட்டாளிகளை என்ன பாடு படுத்துகிறேன், பார்!"— என்று முணுமுணுத்தது அவர் உதடுகள்!

★

நள்ளிரவு!

பண்ணையின் மாட்டுக் கொட்டில்களில் கட்டியிருந்த காளைகளை அவசர அவசரமாக முகத்தையும் உடலையும் கரிய போர்வையால் போர்த்தியிருந்த உருவமொன்று அவிழ்த்து விட்டுக் கொண்டிருந்தது! அதோடு மட்டுமல்ல; அந்த நூற்றுக் கணக்கான காளைகளை கதிர் சாய்ந்து கிடந்த நிலம் நோக்கி விரட்டிக் கொண்டு சென்றது!

ஏன்? மாடுகளை நிலத்தில் விரட்டிப் பயிர்களைப் பாழாக்கும் பயங்கரத் திட்டமாகத்தான் இருக்க வேண்டும்!

நாளைக் காலை அறுவடை என்கிறபோது பாடுபட்டவனுக்குத் தூக்கம் வருமா? படுக்கையிலே புரண்டு கொண்டிருந்த சொக்கன் குடிசையைவிட்டுக் காற்றாட வெளியில் வந்தான்! ஆனால் என்ன அக்கிரமம்! அவன் நிலத்திலே கண்ட காட்சி நெஞ்சை உலுக்க வைத்தது. மறுகணம் கையிலே கம்பை எடுத்து தலை தெறிக்க ஓடினான், நிலம் நோக்கி!

சுழலும் கம்புக்குப் பதில் சொல்ல முடியாமல் காளைகள் வெறித்து ஓடின. ஆனால் வரப்பிலே நின்று கொண்டிருந்த அந்த சதிகார உருவம் மிரண்டு, வந்த மாடுகளை மீண்டும் வயல் நோக்கி விரட்டியது.

ஆனால்......கம்புக்கும் கையுக்கும் அடங்காத காளை ஒன்று அந்த உருவத்தின்மேல் தனது கூரிய கொம்புகள் விரித்துப் பாய்ந்தது!

"ஐயோ!"என்ற அலறல்! சொக்கன் கையிலிருந்த கம்பை வீசி எறிந்தான். மறுகணம் கரிய உருவத்தை இரண்டாவது முறையாகத் தாக்குவதற்குப் பாய்ந்த கோபக்காரக் காளையின் முரட்டுக் கொம்புகள் அவன் கைகளில் சிக்கிவிட்டன! கடும் போராட்டம்! முடிவு...?

உழைத்து உழைத்து உரமேறியிருந்த மனித சக்திதான் வென்றது! ஆனால் அந்த வெற்றி பேரிகை முழங்கிய இடமோ சாவூர்!

"ஐயோ! சொக்கா!" என்ற அலறல் அந்த இரவின் பயங்கர அமைதியைக் கிழித்துக்கொண்டு கிளம்பியது!

கூட்டம் கூடிவிட்டது! இரத்த வெள்ளத்திலே பிணமாகக் கிடந்த சொக்கனின் அருகில் உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருந்தது அந்த சதிகாரக் கரிய உருவம்—பண்ணையார்!

★

" உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்; மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்!"

—சொக்கனின் சிலைக்கு தினம் தவறாது மாலை அணிவித்து இந்தப் பாடலைத்தான் ராகத்தோடு பாடுகிறார் பண்ணையார்! காளிமுத்துவுக்கும் அந்தக் குறளின் பொருள் இப்போது புரிந்துவிட்டது!

★

அந்த மழலைச் செல்வன் தன் அன்புக்குரிய அப்பாவை பலி கொடுத்து அந்தக் குறளைப் புரிந்து கொண்டான். ஆனால் இன்று நாட்டிலே இருக்கிற பண்ணைகள் எல்லாம் பலி ஏதும் தராமல் அதன் பொருளை உணர வேண்டுமே—என்பதுதான் நல்நெஞ்சம் கொண்டோருடைய கவலை— ஆசை—எல்லாம்!

—சொர்ணம்

செப்டம்பர் முதல் வாரம் வருகிறது!

முத்தாரம்

புலவர் குழந்தை
மதியழகன்
நாஞ்சில் மனோகரன்
ப. உ. சண்முகம்
டைரக்டர் காசிலிங்கம்

—மற்றும் பல எழுத்துலக வேந்தர்களின் உயிரோவியங்கள்!

"புகை"—அறிவியல் விளக்கக் கட்டுரை!

"அந்தக் கண்ணீர்!"—தற்போதைய கேரளத்துக் கல்வி அமைச்சர் எழுதிய மலையாளக் கதையின் மொழிபெயர்ப்பு!

'ஒப்பந்தம்'—உள்ளமுருக்கும் இந்திக் கதை!

'சைக்கிள் வண்டி'—காதல் வண்ணம் தீட்டும் ரஷ்யக் கதை!

இவைகளோடு

ஆசிரியர் மு. க. வின் கவிதை நடைச் சிறுகதையும் உண்டு.

(அதிகப் பிரதி வேண்டும் விற்பனையாளர்கள் தேவையான முன் பணத்தோடு உடன் எழுதுக.)

ஆசிரியரும், அச்சிடுப்பவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, தமிழ்நாடு, சென்னை-6